292

உ

சிவமயம்.

சகல நாடகக் கம்பெனியார்களும் பாடி நடித்து வரும்

சாவித்ரி சத்யவான்.

முதற் பாகம்.

மதுரைத் தமிழ் வித்வான்,

ஸ்ரீ. நா. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் இயற்றியது.

இ. மா. கோபாலகிருஷ்ணக் கோன்,

புத்தக வியாபாரம்,

மதுரை & சென்னை.

Copy Right] 1933. [விலை 0-4-0.

உ

கடவுள் துணை.

மதுரைத் தமிழ் வித்வான்.

ஸ்ரீ. நா. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள்

இயற்றிய,

பார்ஸி நூதன

பதிவிரதா பராக்கிரம

சாவித்ரி-சத்தியவான்.

ஓர் இனிய தமிழ் நாடகம்.

முதற் பாகம்.

OFFICE OF T...
9-JAN 193

காப்பு—வெண்பா.

பூமகடன் வாழ்க்கைப் புகழ்பெறுவேம் போற்றுதமிழ்
நாமகடன் வாழ்க்கை நலம்பெறுவேம்—சேமகுண
சத்தியவான் சாவித்ரி தன் சரித மோதியிதற்
கத்திமுகன் றானே யரண்.

மனமாயாரே என்ற வர்ணமெட்டு.

இராகம்-இந்துஸ்தான்தோடி-தாளம்-ஆதி.

பல்லவி.

விமலா கஜமுக விகசிதனே - உனை
வேண்டிக் கொண்டேன் பரமசுதனே (வி)

அநுபல்லவி.

அமல சொரூபனே ஆத்மவரூபனே
ஆனந்தமா யுன்னைப் பாடினேன் - மன
தாரமலர்ப்பதங்கள் நாடினேன் (வி)

சரணம்.

பார்வதி பாலனே பாரதமுஸலனே
பாசாங்குசதர பாகனே - தமிழ்ப்
பாவலருக்குதவு மோகனே (வி)

சாவித்ரி சத்யவான் சரிதமியற்றயான்
தாலா தமிழலங் காரமே - கிருஷ்ண
சாமிபரம்பரைய தாரமே. (வி)

முதல் அங்கம். காட்சி ஒன்று.

இடம்:-கலிங்கதேசம்-சபாமண்டபம்.

நடர்:-சஜகேது, மந்திரி, சேனபதி முதலானவர்கள்.

[அரசன்-சிம்மாசனத்திலிருந்து தெய்வ வணக்கஞ் செய்கிறான்.]

மாதுபாகமானவா என்ற வர்ணமெட்டு.

இராகம்-நாட்-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

தேவாதி யானவா சிவசிவா வசியவா
சேயனை நனிபெறு சீலமாக ஆளவா
தீரா வல்வினை நல்வினை தீர்த்தருள்பவா - நின்
தெரிசனமே பெறமனமே உருகினன்மே லனுதினமே
சேமமே நாடினேன் சீர்பதம் தேடினேன்
சேவை நீ சாதிவா (தே)

[மந்திரி முதலானோர் அரசனை வணங்கித் தத்
தமக்குரிய ஆசனங்களில் அமருகின்றனர்.]

அர:—மந்திரி! உலக விஷயங்களைப்பற்றி நின்பால் சிறிது வினவி யறிய அவா உற்றேன்.

மந்:—அரசே! சமுகம் எதிர்பார்த்தவனு யிருக்கிறேன்.

கரிலோல என்ற வர்ணமெட்டு.

இராகம்-மோகனம்-தாளம்-ஆதி.

பல்லவி.

மதியூக நல் மந்திரியே நமது
மாநிலத்தவர் சுகமா - மழைவளமா (ம)

அநுபல்லவி.

விதியே தவறு துயர் வேதியர்
வேதமோதுகிற விபர மெவ்விதமகா (ம)

மந்திரி! "விண்ணின்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத் துண்ணின் றுடற்றும் பசி" என்றபடி காலாகாலங்களில் மழை பெய்வ

2682
894·811

தின் தவறினும், ஜனங்களுக்குக் கஷ்டம் நேரிடுமன்றோ! ஆத லால் உஞற்றுப்புக்கலிய மழை வளம் எப்படி?

மந்:-அரசே! "மாதங்கள் மூன்று மழை பொழியும் பொன்னாடு, பொன்னிநதியின் புனல்பாயு நன்னாடு" என்கின்றார்களே! அது இந்நாடேயன்றி வேறொரு நாடென்றியம்புதற்கிடமில்லை "அரசனெப்படி யப்படி நாடு" என்பதுபோல் தங்களது செங்கோல் முறையில் அஃதெங்ஙனம் தவறும்?

அர:-சந்தோஷம்! ஆனால், "வேதமோதுதல் வேதியர்க்கழகு" என்றபடி பிராமணர்கள் தங்கள் ஒழுக்கங் குறையாது ஓதுதல், ஓதுவித்தல் முதலிய கருமங்களைச் சரிவர நடத்தி வருகின்றார்களா வென்ன?

மந்:-அரசே! "வேதமறையவர்கள் வீற்றிருக்கும் மகாநாடு" என்கின்றார்களே! அது இந்நாடுதான்.

அர:-சந்தோஷம். ஆனால்,

சரணம்.

புகழ்பெறு ஹரிதலம் சிவதலம் முழுதினும்
பூஜை விழாநடத்து ராசா-நல்ல
புனிதகுண வணிகர் தொழில்முறை உழவர்கள்
பூமிபயிரிடுதல் சேர
மகிழ்வொடிள மாணவர்;சிறுமிகள்
மலிந்து கல்விச் சாலையில் வதிந்து பயில்கின்றாரா (ம)

மந்திரி! "ஆலயத்திருப்பணி அரசனைச் சார்ந்தது" என்றபடி தேவாலயங்கள் கட்டுதல், செப்பனிடுதல், விழா முதலியவை நடத்துதல், தவறாது காலபூஜை நடக்குமாறு நியமனம் பண்ணுதல் முதலியன நம்மைச் சார்ந்ததன்றோ? ஆகவே அஃதெப்படி?

மந்:-அரசே! அந்த முறையில் சகலராஜ்யங்களும் நமது ராஜ்யத்தையே புகழுகின்றன. இம்முறையில் நமது ராஜ்யத்தைப் பின்பற்ற வேண்டுமென்று அநேகராஜ்யங்கள் முயன்றுவருவதை நான் நன்குணர்வேன்.

அர:-சந்தோஷம்! ஆனால் வைசியர் முறைப்படி வியாபாரம் நடத்துதல், வேளாளர் முறைப்படி பூமிபயிரிடுதல் முதலியன யாதொரு குறையின்றி நடைபெறுகின்றதல்லவா?

மந்:-ப்ரபூ! அவ்விஷயத்தில் யாதொரு குறைவுமில்லை.

அர:-நல்லது! ஆனால்,

இந்தக்குட்டையை என்ற மெட்டு.

இராகம்-தேசிகபியாக்-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

சிற்றரசர்கள் பகுதி நமக்குச் செப்பிய முறைப்படி
செலுத்துகின்றதும் அவர்கள் செய்கையுமே எப்படி (சி)

மந்திரி! நம்மைச் சார்ந்த தேசராஜ்யங்கள் சொன்னசொன்ன படி நமக்குப் பகுதிப்பணம் செலுத்தி வருகிறதும், நமது ராஜ்ய முறையில் அவர்கள் நடந்து வருகிறதும் 'எப்படி' என்பதைப்பற்றி யும் சிறிதறிய ஆவலுறுகிறேன். ஆனால் யுத்த மந்திரி ஊரிலில்லை என்பதும் எனக்குத் தெரியும்.

மந்திரி:— கண்ணிகள்.

உத்தமந்த்ரியே நன்கறிவர் உற்றவாறீ துண்மையே
ஊரிலவரில்லையேனும் உரைப்பேன் யானத் தன்மையே (உ)

வேந்தே! நமது யுத்த மந்திரியே இதைப்பற்றி நன்குணரக் கடமைப்பட்டவர். ஆயினும் அவர் இது சம்மந்தமாகவே தேச சஞ்சாரம் செய்து வருகின்றனர். எனக்குத் தெரிந்தவரையிலும் இதைப்பற்றி யானறிந்தனவற்றை ஒருவாறுரைக்கிறேன்.

மரத்திலறைந்த கடிதக்கருத்தின் என்ற மெட்டு

இராகம்-சுருட்டி-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

சால்வதேசத்தரசன் தியுமத்ஸேனன்புத்ரன் சத்யவான்
தன்வலி சமர் சமர்த்த தைரிய வீர சத்தவான்-அப்
பால்ய னோடு நாமெதிர்த்துப் பட்ட பாட னந்தமே
படைகள் சேனை சைன்யமாதி பதிகொடுத்தும் வந்தமே
அந்த தேச வலிமை கொண்ட னேக தேச ராஜ்யமே
அலட்ச்யமாய் நமை மதித் தபேட்சித்த சுயாட்சியமே-நாம்
இந்த ஒன்றை யேஜெயித்தற் கேற்ற சூழ்ச்சியா தென்றே
எண்ணி எவ்வித தத்திலு மியற்றுதல் மிகநன்றே (சா)

அரசே! இதுவரையிலும் நம்மோடு உடன்படிக்கை செய்து கொண்டு, நமக்குக் கப்பங்கட்டிவந்த அநேக தேசராஜ்யங்கள்

கூட நம்மை நிராகரிக்கத் துணிந்துவிட்டன. ஒவ்வொரு வீதிலும், ஒவ்வொரு கிராமத்திலும் "இது கொடுங்கோலரசு, இது கொடுங்கோலரசு" என்று முறையிடுகிறார்கள்; இதைப்பற்றி நாம் இனியும் கவனியாதிருந்தால் ஒரு வேளை அதினால் நமக்குளேதானும் தீங்கு உண்டாகலாமாகவே நமது யுத்த மந்திரி இதில் எப்பொழுதும் கண்ணும் கருத்துமாகவே இருந்துவருகிறார். மேலும் "இந்த தேசராஜ்யங்களுக்கு இவ்வளவு தைரியம் உண்டாய்விட்டதின் காரணமே அந்தச் சால்வதேசந்தான்" என்பது அந்தரங்கரகஸ்யம். ஆகவே சால்வதேசத்தின் மீது இனியோர்முறை நாம் யுத்தத்திற்குச் செல்லத்தான் வேண்டுமென்று நினைக்கிறேன்.

அர:-மந்திரி! முற்றிலும் இது சரி. நானும் அப்படித்தான் நினைக்கிறேன். ஆனால் சென்றமுறை நாம் அத்தேசத்தோடு யுத்தந் தொடங்கி, அபஜய மடைந்தபடியால் அதுமுதல் யுத்தக் கருவிகள், பீரங்கி, வெடிகுண்டு முதலியன அதிகமாக உண்டுபடுத்தற்கேற்ற தொழிற்சாலைகளை ஏற்படுத்தியும், ஒவ்வொரு குடும்பத்திலும் ஒவ்வொரு ஆண்மகன் போர்ச்சேவகனாய்ச் சேரவேண்டுமென்று கட்டாயச் சட்டமேற்படுத்தியும் இருக்கிறோமல்லவா? ஆதலால் இப்போது சால்வதேசத்தோடு யுத்தந் தொடங்குதற்கேற்ற தருணந்தானென்று நினைக்கிறேன்.

[அங்கு வந்திருந்த சேனாபதிகளை நோக்கி]

விருத்தம்-அடாணா.

நன்றினி வலிமைகொண்ட நமதுசே னாபதிகாள்
இன்றுநீர் சைன்யமாதி இகல்படை யணிகள்கூட்டிக்
குன்றொடு குன்றுசேர்ந்து குலவின குவிந்ததென்னச்
சென்றுபோர்தொடுத்துவெற்றி ஜெயக்கொடி நாட்டுவீரே.

என்பேரைச்சொல்லி என்ற வர்ணமெட்டு.

இராகம்-இந்துஸ்தான்மோகனம்-தாளம்-ரூபகம்,

கண்ணிகள்.

இத்தருணத்தினில் யுத்தம் புரிந்திட
எகிடுவீர்நீரே ஜெய மேபெறுவீர்நேரே-அந்த
சத்திய வானைப்பி டித்துச்சிறையினில்
தாக்கிக்கொணர்வீரே உயிர் தத்தளிக்கநேரே-சரி

தக்க அவனைக்க சக்கிர சுக்கிரான்,
சாராய்ப் பிழிந்திடுவேனே
சாராய்ப் பிழிந்திடுவேனே (இக்)

சுத்த வீரஞ்சிறந்த யுத்தவீரர்காள்! தானஞ்சிறந்த சேனாதிபதிகாள்! இன்றே செல்லுங்கள்! இன்றே செல்லுங்கள்!

[சேனாதிபதிகள் அனைவர்களும் தலையைக் குனிந்து தரையை நோக்குகின்றனர். அரசனுக்குக் கோபம் வருகிறது.]

முருவே செறித்த குழலாள் என்ற மெட்டு.

இராகம்-தேசிகசுருட்டி-தாளம்-ரூபகம்.

இலரா ஒருத்தர் இடமே மிகுத்த
இனமே பகுத்த படையாளர்
இசையாதரித்த திடமார் சமர்த்தர்
எவரார் சிறத்த நடையாளர்
வலியாண்மை வைத்த அணியாய்வகுத்த
வகைபோர் பொருத்த வலரார்காண்
வணமேவு தத்தம் புகழே நிறுத்த
வருவீர் குறித்த கணமேதான்
பலகால் பகுதிப் பணமே செலுத்திப்
பணிவாய்ப் பணிந்த பயங்கோளி
படிமீதெதிர்த்த விதமேது மெத்தப்
படையே தவனுக் கிதுகேலி
அலைமோது வித்த கடலூ டுதித்த
அமுதே நிகர்த்த மொழிமாதர்
அவர்போ லுமக்கு முகமீதெதற்கு
அணிமீசை மிக்கும் அறிவீரே.

ஏ வீரர்காள்! உங்களைச் சேனாதிபதிகள் என்று கூப்பிடவும் எனக்கு வெட்கமாயிருக்கிறது: அரசாங்க வருமானத்தில் நாலில் மூன்று மடங்கு யுத்தச்செலவிற்கு ஏற்படுத்தியும் நீங்கள் சம்பளம் பெற்றுக் கொழுக்கத் தின்றதுதான் மிச்சம். சமயத்தில் தலை குனிவதைவிட உயிர் விடுவது மேல். கேவலம் ஒரு பால்யனான சத்தியவான் என்பவனுக்கு ஆற்றாது, மூன்று தடவை புறமுது

விட்டு வந்தீர்கள். (மந்திரியை நோக்கி) நல்லது மந்திரி! யுத்த மந்திரியை அதிசீக்கிரம் இங்கு வரும்படி உத்தரவு பிறப்பியுங்கள்.

[சேனாதிபதிகள் எல்லாம் மண்டியிட்டு அரசனை வணங்கி]

வருகிறானே வாரானே என்ற மெட்டு.

இராகம்-சாவேரி-தாளம்-ஆதி.

பல்லவி.

அரசர்க்கரசே யாங்கள் அறைவதுகேட்டுத் தாங்கள்
அருளுதல் வேண்டும் ஐயனே (அர)

அநுபல்லவி.

திரமுரைத்திடல் மேலோ திரசத்யவான் பாலோ
செருவதெங்கனங் கூடும் சேடனும் வாயைமூடும் (அர)

சரணங்கள்.

சமரச நிலையொத்த தைரியமே மிகுத்த
தருந்த ஒருவனிந்தத் தருணமிருப்பிலந்த

புயபல சத்யவானைப் பொருதக்கூடுங் கன்றனை
போரிடமுன் துணிந்தோம் புறமுதுகிட்டு வந்தோம் (அ)

அரசே! "ஏழைபேச்சு அம்பலம் ஏறாது" என்றாலும் நாங்கள் சொல்வதைச் சிறிது கேட்டருளல் வேண்டும். நமது தேசத்து யுத்தமந்திரியாரவர்களது போர்வல்லமையையும், நீர்க்காலோசனையையும், தந்திர சக்தியையும் பற்றிப் பயப்படாத தேசமில்லை. "இவர்காலம் வரையிலும் நமது தேசத்திற் படையெடுப்பதில்லை" என்று சத்துருக்கர்களும் பிரதிக்ஞை செய்திருந்தார்கள். இத்தகையாருங்கூடச் "சாலுவதேசத்தைச் சிறைபிடித்தாலொழிய உருவியகத்தியை மீண்டும்உறையிற்புகுத்தேன்" என்று மும்முறை யுத்தந்தொடங்கியும் சத்தியவானிடத்தில் அது பலிதப்படாது போயிற்று. "அடுத்து முயன்றாலும் ஆகுநாளன்றி எடுத்தகருமங்கள் ஆகா" என்பது ஒரு பழமொழி. 'ஆகவே சிறிது பொறுங்கள். நமது யுத்தமந்திரியார் இதற்காகவே அன்னியதேசம் சென்றிருக்கிறார். இன்று வருவதாக வதந்தி வந்திருக்கிறது.

[யுத்தமந்திரி வெகு பரபரப்புடன் வருகிறார். எல்லோரும் அவரைவணங்குகிறார்கள். அவர் அரசனை வணங்கி ஆசனத்தில் அமருகிறார்.]

அர: மந்திரி! எங்கெங்கு சென்றிருந்தீர்கள்? என்ன விசேடம்? முகத்தைநோக்கச் சந்தோஷக்குறி காணுகிற படியால் சால வதேச சம்பந்தமாக இனி நமக்கு ஜெயந்தான் போலும்!

[மந்திரி எழுந்து நின்று அரசனை நோக்கி]

தனத்த தானத் தனன தானன என்ற திருப்புகழ்ச் சந்தம்.

இராகம்-ஆனந்தபைரவி-தாளம்-ஆதி.

கடந்த சோலைப் பழமோ ராறெனக்
கிடந்த தேனெற் கதிரா மாறிடு
கலிங்க தேசத் தரசே யோர்மொழி இதுகேண்மோ
கடிந்து போரிற் செயமே நாம்பெற
மடிந்த சேனைக் களவே யேதெனக்
கலங்கி டாதித் தினமே போர்மிசை செலவேணும்
தொடர்ந்து நாளும் பெருமா லோசனை
நடந்து மேலும் எதிரா ளியினித்
தொலைந்து போகும் விதமே யிதென ஒருசூழ்ச்சி
துணிந்து நானிச் சணமே காதக
மணிந்து தானே புரிவா னுயினேன்
துலங்கு கோனே வருவீ ரேகுவம் படையோடே.

அரசே! நாம் எவ்வளவோ முயற்சி செய்தும் சத்தியவந்தனை ஜெயிக்கநம்மால்முடியவில்லை. ஆனால், "பகல்வெல்லுங் கூகையைக் காக்கை யிகல்வெல்லும் வேந்தர்க்கு வேண்டும் பொழுது" என்றபடி தந்திரயுக்தியால் அதம யுத்தம் புரிந்தாலன்றி இவனை ஜெயிக்க முடியாதென்று அதற்கு வேண்டிய சூழ்ச்சிசெய்து, ராஜ தந்திர முறைப்படி அவனை அன்னியதேசம் அனுப்பிவிட்டேன். இப்போது திரும்புவதென்றாலும் மாதம் மூன்று செல்லும். இது சமயம் திடீர் என்று நாம் சென்று, கோட்டையை வளைத்து முற்றுகைபோட்டு, த்யுமத்ஸேனனையும் சிறையிட்டு விடுவோமானால், பின்னர் அரண்கள் ஏற்படுத்திப் பீரங்கி முதலியன வைத்து நம்மை நாம் பாதுகாத்துக்கொள்ள முடியும், இதுதான் தீர்மானம்.

[எல்லோரும் 'சரி சரி' என்று தலையசைத்துப் புறப்படுதற் காயத்தப் படுகின்றனர்.]

காட்சி முடிகிறது.

முதல் அங்கம். காட்சி இரண்டு.

இடம்:-சாலவபுரி சபாமண்டபம்.

நடர்:- த்யுமத்சேனன், மந்திரி, சேனாதிபதி முதலானவர்கள்.

[அரசன் சிம்மாதனத்தி லிருந்து
தெய்வ வணக்கஞ் செய்கிறான்.]

தாசராஜ என்ற வர்ண்மெட்டு.

இராகம்-தேசிகதோடி-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

மாமதிநதிபுனைந்த மாசடாதரா-மழு
மானூர்கரா ஓம்ம கேசுவரா சிவ மாம்பராபரா (மா)
மகுடமதாலக மகிழ்வொடுசாலவ மகிதல மிதையாமே-இவண்
மனுமுறைவழுவா வழிவழியரசாள் வரலருள் சிதையாமே - திரு
மறைமொழியாகாரணஉனதிருசரண் மலரடிதொழுவாமே-எம்

மாகத உமையாள் வரதவந்தனையாள்
மலரடி தொழுதோமே-நின்
மலரடி தொழுதோமே-நின் (மா)

[மந்திரி முதலானோர் அரசனை வணங்கித் தந்
தமக்குரிய ஆசனங்களில் அமருகின்றனர்.]

அர:-மந்திரி! சிறிது நாளாக நான் தர்பாருக்குச் சரியாய் வருகிற தில்லை. காரணம் தேசசஞ்சாரஞ் செய்யப்புகுந்த எனது புதல்வன் சத்தியவானின் பிரிவாற்றாமையே யாகும்.

மந்:-ஆம் இறைவ! "கடந்த ஞானியும் கடப்பரோ மக்கள்மேல் காதல்" என்றபடி நம் இளவரசரின் பிரிவாற்றாமையால் தங்கள் மனது பெரிதும் சஞ்சல மடையுமென்பது நான் நன்குணர்ந்தவிஷயம். ஆகவே தாங்கள் தர்பாருக்குவாராவிடினும் சகல காரியங்களையும் நானே பார்த்து வருகிறேன்.

அர:-சந்தோசம்.

[சேனாதிபதி பரபரப்புடன் உட்
பிரவேசித்து அரசனை நோக்கி,]

பாங் காயிலாலே சாலிரா என்ற மெட்டு.

இராகம்-தேசிகதோடி-தாளம்-ஆதி.

பல்லவி.

அநியாய மென்னசொல்லுவேன் - ஆஹாகொடிய (அ)

அநுபல்லவி.

சனியானகஜகேது சமர்தொடுத்தானம்மீது
தகுந்தபடைகள்கொண்டு சமுத்திரம்போல்திரண்டு (அ)

[அரசன் திடுக்கிட்டெழுந்து பயந்தவனாய்]

தோஹையரு.

இனியேது செய்குவோம் எவ்வாறினி உய்குவோம்
எதிர்ப்பதற் காற்றுவோமோ
என் மகன் சத்யவான் இல்லாத சமயத்தில்
இவன்செய்கை யேற்றதாமோ

(சேனாதிபதி நோட் எடுப்பு)

எதுக்கும்நீர் அஞ்சாதீர் எங்கிக்கவல்மிஞ்சாதீர்
என்னாலான மட்டுமோர்கையனெதிர்த்துப் பார்க்கிறேன்
எப்படியும் தங்கட்கோரி டைஞ்சலன்றிக் காக்கிறேன்

அரசே! நமது இளவரசர் இல்லாத சமயத்தில் இவன் வந்து, அநீத யுத்தம்புரிந்து நமது ராஜதானியிற் கொடியேற்றி விட்டான். நமது சேனாசைன்யங்கள் கடும்போர் புரிந்தும் பயன் படாதுபோயிற்று ஆயினும்நான்இன்னும்சில,சையன்யங்களுடன் சென்று, எப்படியும் அவன் புறமுதுகிட்டோடும்படி செய்கிறேன். பின்னர், தெய்வச்செயல்.

[சென்று விடுகிறான்.]

[அரசன் எழுந்து நின்று மந்திரி பிரதானிகளை நோக்கி.]

வளமேவிய மடைசூழ் என்ற கண்டி ராஜா வர்ணமெட்டு.

படுபாதகத் தனமாகவே படையோடடுத்தனனும்
பலநாடுகள் நிலையாகவே பலமாய்ப் பிடித்தனனும் (ப)

பிரதானிகாள்! பார்த்தீர்களா? சத்தியவான் இல்லாத சமயம் பார்த்து, இந்த கஜகேது செய்த துரோகமான காரியத்தை?

பிரதா:— ஷை பாட்டு.

அடுபோரதின் இடமொறெமக் கறையாதது முறையா
அடமித்தனை இடமேவிய அவன்வைத்தது சிறையா (அ)

அரசே! அவன் நமக்கறிவியாவண்ணம் இந்தப்போர்தொடங்கி யுள்ளான். ஆயினும் அவன் பிடித்த நாடும், அவன் வைத்த சிறையும் நாடும், சிறையும் ஆகாது.

அரசன்:— ஷை பாட்டு.

பொருவீரர்கள் சரியொப்பவே பொருதுந்திற மிலையா
புதல்வன்தனி இலையாயினும் புலியாவதும் எலியா (பொ)

பிரதானிகாள்! ஆயினும் நம்மிடத்தில் தகுந்த சைன்யங்கள், படையாயுதங்கள் இருக்கின்றன. சத்தியவான் இல்லாதுபோயினும் புலி எலியாய்விடுமா வென்ன? "யானை படுத்தாலும் குதிரை யளவு" அல்லவா? இது சமயம் நாம் செய்யத்தகுந்த காரியம் எது?

பிரதானிகள் ஷை பாட்டு.

வருவீர்ஜெயம் பெறுவோம்பல வகையும்சமர் புரிவோம்
வசைமேவிய கஜகேதுவின் வலியேதெனத் தெரிவோம் (வ)

அரசே! "சிறுபாம்பெனினும் பெருந்தடி கொண்டடித்தல்" முறையாதலால் நாம் நம்மிடத்துள்ள சைன்யங்கள் முழுதுங் கொண்டெதிர்த்து, எப்படியும் ஜெயம்பெறுதல் வேண்டும். முடியாதெனில் புறமுதுகிடாது ரணகளத்திலேயே உயிர் விடுதல் வேண்டும். ஆகையால் இப்பொழுதே நாம் அதற்குத்தக்கமுஸ்தீப் புடன் கோட்டையரணை யணுகிப் புறப்படுவோம்.

[எல்லோரும் யுத்தத்திற்குப் புறப்படுகின்றனர். எதிரிகள் பலமாய்த் தாக்கிக் கோட்டைகள் முற்றிலும்முற்றுகைபோட்டு அரசனையும்சிறைபிடித்து விட்டனர். அரசன் கஜகேதுவைப்பார்த்து,]

சப்தகலந்தரு என்ற வர்ண மெட்டு.

இராகம்-தேசிகஸப்ராவி-தாளம்-ரூபகம்,

துயு:—கலிங்கதேச சத்தரசே கஜகேது நீயெனக்குக்
கருதியிடர்விளைத்த வகையேது

கஜ:-கட்டும்பகுதிப்பணம் கட்டாமல் நீயெனக்குக்
காலன்போலே மூளைத்த விதமேது

துயு:-காவலர்க்கு ளேசகசம் காரணமீ.தொக்குமா

கஜ:-காரணமெவ் வாதெடுத்த காரியம் பலிக்குமா-ஜீவ

துயு:-காருண்யஞ் சற்றுமாறுதே - இனிக்

கஜ:-காதலிதொன் றுமேறுதே - என்

துயு:-கண்மணிசத் யவானிருந் தாலிங்குனை வாட்டுவேன் - நின்

கஜ:-கண்ணிரண்டை யுங்கவர்ந்து காட்டிற்புக வோட்டுவேன் (க)

துயு:-கஜகேது! நீசெய்தகாரியம் சரியல்ல "அறனிழுக்காதல்லவை நீக்கி மறனிழுக்கா மானமுடையரசு" என்றநீதியைமறந்து; என் புத்திரன் இல்லாத சமயத்து வஞ்சகமாகப் படையெடுத்து, அநீதயுத்தம்புரிந்து என்னையும் சிறையிலிட்டனை. இத்தகையகொடுமை செய்வதற்கு நான் உனக்கு யாதொரு தீங்குஞ் செய்யவில்லை. ஆனால் இதற்குமுன் நான் உனக்குப் பகுதிகட்டிவந்து, பின்னர் யுத்தமுறையில் நீ எனக்குமூன்று முறை புறமுதுகிட்டோடியதினால் கட்டாது நிறுத்தினேன். அதுவுமன்றி உன்னிடம் நான் பகுதிவாங்க வேண்டியதிருக்க வாங்காதும் நிறுத்தினேன், இது அரசநீதி. இதற்காக நீ செய்திருப்பது அநீதி "குடைநிழலிருந்து குஞ்சரமூர்ந்தோர் நடைமெலிந்தோரூர் நண்ணினும்நண்ணுவர், சிறப்புஞ்செல்வமும் பெருமையுமுடையோர் அறக்கூழ்ச்சாலை அடையினு மடைவர்" என்றபடி சுகமும் துக்கமும் சக்கரம்போல் சுழலுமாகவே இந்த வாழ்வு ஒருவாழ்வல்ல. இதற்கிடையில் நாம் செய்கின்ற நன்மை தீமை இரண்டுமே நம்மைச்சாரும். இது தெரியாது நீ தலைகீழாய்த்தட்டுக்கெட்டுத் தடுமாறுகின்றனை.

கஜ:-போதும் உனது ஞானோபதேசம் வாயைமூடு.

போம்போம் இதுவும் கனமா என்ற மெட்டில் பின்னடுக்கு.

இராகம்-தேசிககாம்போதி-தாளம்-ரூபகம்;

பல்லவி.

நீயோ எனக்குரைப்பவன் - சீச்சி
நீயோ எனக்குரைப்பவன் - கன

கிட்டு ஈமேகீசெய் திட்டாய் பழிமொழை
பட்டாய் குலமொடு கெட்டாய் நெறிமுறை (நீ)

அநுபல்லவி

வாயோ உனக்கு நில்ல வாக்யம் பலதுசொல்ல
வந்தாயெனக்குமுன்னே வாழ்வுசிதைப்பேனுன்னை (நீ)

சரணம்.

பண்டையிருந்தெனக்குப் பகுதிப்பணம் செலுத்திப்
பணிந்து வணங்கிநே டந்தாய் - இந்தப்
பார்முழுதுஞ் சிறந்த பார்த்திப னெனவென்னைப்
பகைத்தும்படை யெடுத்தும்வந்தாய்
சண்டாளன் உந்தன் மகன் சத்தியவானின்றுவந்தால்
சதிப்பேன் மிதிப்பேன் உதைப்பேன் வதைப்பேன் (நீ)
[போர்வீரர்கள் நால்வரை நோக்கி]

இந்தச் சண்டாளனையும், இவன் மனைவியையும் மனுஷ சஞ்சாரமில்லாத ஆரணியத்திற் கொண்டுபோய் இருவர் கண்களையும் கவர்ந்து துஷ்டமிருகங்களுக் கிரையாகும் வண்ணம் விட்டுவிட்டு வாருங்கள் சீக்கிரம். அவர்கள்மீது இரக்கம் பாராட்டவேண்டாம்.

[அரசன் சரசரவென்று போய்விடுகிறான். மற்றவர்கள் மேல்நிகழ்வனவற்றைப்பற்றி ஆலோசித்துக்கொண்டிருக்கிறார்கள்.]

முதல் அங்கம். காட்சி மூன்று.

இடம்:—மனித சஞ்சாரமற்ற காடு.

நடர்:—த்யுமத்சேனன், பத்மாக்ஷி நான்கு போர்வீரர்கள்.

மூன்:-(இரகசியமாய்) ஆம் அரசர் இவர்களிருவர்களுடைய கண்களையும் கவர்ந்து காட்டில் விட்டுவரும்படி நமக்குக்கட்டளையிட்டார் 'சரி' என்று நாமும் ஒப்புக்கொண்டு வந்துவிட்டோம். ஆனால் எவ்வாறு கண்களைக் கவருகிறது?

பின்:-கட்கத்தினாலே தோண்டி எடுக்க வேண்டியதுதானே?

மற்:-சேச்சே! அதற்கு இருதுண்டாய் வெட்டிவிடலாமே?

வே:-அரசன் கட்டளை அவ்வாறல்லவே?

மூன்:-பின் என்ன செய்கிறது?

பின்:-இந்தயோசனை உண்டாகுமென்று எனக்கு முன்னமே தெரியும். அதினால்தான் நான் ஒன்று கொண்டுவந்திருக்கிறேன்.

மற்:-அது என்ன "கண்மழுங்கிக் கண்ணாடி"யோ?

பின்:-ஆம் அதுதான்.

மற்:-அதை என்ன செய்கிறது?

பின்:-அதைக் கண்ணுக்குமுன் காட்டினால், கண்ணினுடையபிரகாசத்தை அது இழுத்துக்கொள்ளுகிறது. அதற்குப் பிறகு அவன் கண் குருட்டுக்கண்ணே.

மூன்:-அதுசரி. நல்லகாரியம் செய்தாய்! ஆனால் இருவர் கண்களையும் கவரும்படி அரசன் கட்டளை 'அப்படிச் செய்வதுபாவம்' என்று நான் நினைக்கிறேன். நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

மற்:-நாங்களும் அப்படித்தான் நினைக்கிறோம்.

மூன்:-அரசன் கட்டளையை மீறினால் நமக்கு ஆபத்து. இவர்கள் இருவர்களையும் குருடர் ஆக்கிவிட்டால் இவர்கள் பிழைக்கவே முடியாது. இரண்டிற்கும் இடையில் அரசன் கண்களை மட்டும் குருடாக்கிவிட்டுப் போய்விடலாம்.

எல்:-ஆம் அப்படியே செய்துவிடலாம் வாருங்கள்.

[அரசன் கண்களை மட்டும் கெடுத்துவிட்டு அவர்கள் போய்விடுகிறார்கள்.

துய:—கடவுளை நோக்கி,

சோமசுந்தரனே என்ற மெட்டு.

இராகம்-கல்யாணி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

சந்த்ர சேகரனே-மெய்த்
தாத மூத வேத போத (சந்)

அநுபல்லவி.

அந்தகன்போ லென்னையாக்கி
ஆரணியந் தன்னிற்போக்கி
தொந்தரை செய் தான் நீ சாக்ஷி
சோதி காதி நீதி யாதி (சந்)

சரணம்.

ஏதுபாவம் செய்தனோமுன்
இக்கதிக்கு ளாகியே யென்
மாதுடன்வ சிக்கிறேன் நன்
மார்க்க மீய நோக்கென் தூய (சங்)

மைந்தனில்லா வேளை கண்டு
வாதுசெய்ய வேதிரண்டு
வந்தகஜகே துருண்டு
மாய வேசெய் வாயி துமெய் (சங்)

ஹே! ஜகதீசா! ஒருவிதத்திலும் துரோகம் நினையாத என்னை ஏதோ பலவிதத்திலும் தனக்கு இடைஞ்சல் செய்துவிட்டதாக எண்ணி, கஜகேது என் கண்ணைக்கெடுத்துக் காட்டில் விட்டுவிட்டான். "தீயவர்க்கு நல்லவரே தீயவராம்" என்றபடி எனது செங்கோல்முறை அவனது கொடுங்கோலுக்குமுன் ஒரு கொடுங்கோலாகவே போய்விட்டது. ஆயினும் என் மனைவியின் கண்ணையும், கெடுத்துவிடாதபடி அவர்கள் இருதயத்தில் நீ புகுந்து, என்னைக் காப்பாற்றினதற்காக நாங்கள் நன்றி செலுத்துகின்றோம்.

பத்:-பிராணேசா! வருவது வந்துதான் தீரும், மேலும் மேலும் நாம் சஞ்சலப்படாது இங்கு வசித்துவரும் தவசிரேட்டர்களுடன் கூடி, காய் கனி கிழங்குகளை அருந்தி ஜீவித்துவரலாம். நமது புத்திரன் எப்போது வருவானோ தெரியவில்லையே?

துயு:-கண்மணி! அவன் வர ஏறக்குறைய இன்னும் மூன்று மாதங்கள் செல்லுமென்று நினைக்கிறேன். எப்படியாவது இந்த விபரம் அவன் அறிந்தால், கூடிய சீக்கிரம் திரும்பிவிடுவான். மீண்டும் அவன் கஜகேதுடன் சண்டைக்குப்போகமுயன்றால் எப்படியும் நாம் தடுத்துவிடவேண்டியதுதான். ஏனெனில் அவனுக்கு ஏதாவது ஆபத்து வந்தால், நாமுயிர்விடவேண்டியதுதானே? [பத்மாக்ஷியின் துணைகொண்டுசெல்லுகின்றார்]

பத்:-ஆம் அதற்கென்ன தடை! கடவுள்நம்மைக்காப்பாற்றுவாராக.

[காய்கனி முதலியவற்றை அருந்தியும் புத்திரனை எதிர்பார்த்தும்கானகத்தில்காலங்கழிக்கின்றனர்.]

காட்சி முடிகிறது.

இரண்டாம் அங்கம். காட்சி ஒன்று.

இடம்:—மத்ராபுரி நந்தவனம்.

நடர்:—சாவித்திரி, தோழிகள் சத்தியவான், மாடவ்யன்.

[சாவித்திரி தோழிகளுடன் ஜலக்கிரீடை செய்ய அரண்மனை நந்தவனத்திற் பிரவேசிக்கின்றனள். புஷ்பச்செடியின் முன் கையை நீட்டி]

கோந்தாரும் பூங்கணையால் என்ற வர்ணமெட்டு.

இராகம்-தேசிகதோடி-தாளம்-ஆதி.

இந்தப்-பூங்கா வனம் போ லுண்டோ-நல்ல
போக போக்யமே-சொல்ல
வேசி லாக்யமே-செல்ல
வெயென் பாக்யமே-இந்தப் (பூங்)

அநுபல்லவி.

பாங்கான சோலை பார்த்தாயுங்காலை
பசும்புல்தரை சிங்காரம்
அலங்காரம்-புனலோரம்
இது நேரம் குயில்
பாடுகின்றசங் கீதம்-மயில்
ஆடுகின்றஇங் கிதம்-நனி
பாங்கிற்றளிர் பூங்கொம்பிடை
ஆங்குற்றெளிர் தேங்கும்படை
பற்றும்படி பொற்றும்பின
முற்றும்வடி விற்றங்கின (பூங்)

சாவித்திரி:- தோகையரு.

மாங்கனி, தேங்கனி, பலாக்கனி தனித்தனி
வழிந்தாது போலோடுது

தோழி:- மந்திபல வரிசையாய் வந்துவந் திருகையால்
வாரியதை யுண்டாடுது

சாவித்திரி:- வேறு எடுப்பு.

வந்திங்குபார்த்திடுங்கள் -சகிகாள்
வந்திங்குபார்த்திடுங்கள் -பரி
மளமிகுந்திடு முளரியமல சமுகுதங்கொரு குளமிருக்குது
வண்டுகள்பாடுவது -சகிகாள்
வண்டுகள் பாடுவது -கேட்க
மதுரபாங்கர கிருஷ்ணர் பாடிடும் முதுமொழித்தமி ழினிமை நீடிடும் (பூ)

சகிகாள்! என்ன அழகு! என்ன சிங்காரம்! ஆகா கவிவாணர்கள் எல்லாம் தங்கள் தங்கள் அறிவுக்குத்தக்கபடி கட்டுப்பாடாக உவமான உவமேயங்கள் பொருந்துமாறு பாடியிருக்கின்றார்களென்றே இதுவரை நான் நினைத்திருந்தேன், அது தப்பு. அவர்கள் உள்ளது உள்ளவாறே பாடுவரென்று இதன் மூலம் நன்கு புலப்படுகிறது. நல்லது! அதோ! அந்தச் சூரியகாந்திப் புஷ்பத்தினுடைய பிரகாசத்தைப் பார்த்தனையா?

தோ:-ஆம் அம்மா! பார்த்தேன். ஆனால் அது கண்ணுக்குமட்டும் பகட்டாயிருக்குமேயன்றி, காரியத்தில் ஒரு காசும்பெறாது. அதோ இருக்கிறது பார்! அந்தச் சண்பகம், அதன்மீது உன் கண் செல்லவில்லைபோலும்? வாஸ்துவந்தான் உலகம் பகட்டான ஒன்றைத்தானே மதிக்கின்றது?

சாவி:-அப்படியா! சரிதான். ஆனால், அதோ பார்! அதற்கடுத்த பூஞ்சோலையில்; அங்குவா செல்லுவோம்.

என்ன ஆனந்தமே என்ற வர்ணமெட்டு.

இராகம்-தேசிகதோடி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

இவ்வனத்துக்காட்சியே இயம்பவொண்ணுதத்தாட்சியே (இ)

அநுபல்லவி

இந்திரலோகங்கடந்த சந்தனங்கமழ்கடந்த (இ)

சரணங்கள்.

செவ்விய செந்தாமரை சேர்ந்திலகும் அசோகம்
தேன் ததும்ப வடித்துச் செழிந்தபலா ஓர்பாகம்
கவ்வல் கொழுஞ்சிகொய்யா காரத்தையு மனேகம்
காணவிருக்குத்தாடு நகர்ந்து செல்கிறமேகம்

நாகணவாய் இன்னுயினக் கூட்டம்- மறை
நவில்வதோ ரானந்தக்கொண் டாட்டம்-வண்ணத்
தோகைவிரித்தாடுமயி லீட்டம் - கருஞ்
சொர்ணக்குயில்கூவுவய தேட்டம்

துணையோடின வண்டு
சுகிர்தமலர்க் கண்டு
அணைந்ததில் தேனுண்டு
அசைபுதின் பங்கொண்டு-ஆஹா (இவ்)

தோடிமோகன ராகத்தில் தோத்திரக்கீர்த்தனம்பாடும்
தூயதடாகத்தலைகள் தோன்றியாங்கு தாளம்போடும்
பேடினம் அன்னங்கள்நீரில் பேணிப்பின் பிணங்கிக்கூடும்
பேதமில் தாராவாத்துக்கள் பிந்தமுந்த நீந்தியோடும்

பிச்சிப்பூ செவ்வந்தியிரு வாட்சி - மணம்
பெருகும் சண்பகமலர் மாட்சி-ஸ்திரீகள்
இச்சையாயணியும்ரோஜா நீட்சி -எழில்
இன்னும்பல காணவேகண் காட்சி

இதுபளிங்கு மேடை
இருபுறம்நீ ரோடை
அதிலிருந்து வாடை
அடிக்குந்தென்றல் சாடை-ஆஹா (இ)

இங்கங்குமா சக்குரங்கி னங்கள்மரம் எதித்தாவும்
ஏகமாய்க் கிளைகளைசைந் தேற்றமாங்கனிகள் தாவும்
கங்குகரை யற்றமுக்க னிரசங்க சிந்தமேவும்
காந்தண்முல்லை வேங்கைமீது கட்டுறைப்படர்ந்த யாவும்

காலமோ சுகமுறுவ சந்தம் - பொங்கு
காதலைப் பெருக்கிடுசம் பந்தம் - இங்கு
சிலமோ சிறந்திடு மனந்தம் - சொல்லச்
செந்தமிழ்ப் பாஸ்கரகிருஷ்ணர் சொந்தம்

சிந்தையுள் நல் நேசம்
திகழுகிற பாசம்
சந்திரப்ர காசம்
தந்திடு முல் லாசம் - ஆஹா (இவ்)

சகிகாள்! இதனால் தான் மகரிஷிகளெல்லாம் ஆரணியத்தையே நாடுகின்றனர். இங்கு இருப்பவர்களுக்கு மனோரம்மியமே குடி கொண்டிருக்கும். "சாதாரண விவகாரங்களில் மனத்தைச் செல்லவிடாது மோன நிலையிற் கட்டுப் படுத்துவதற்கு ஆரணியந்தான் ஆவசியம்" என்பது தெற்றென விளங்குகிறது. பல நூல் ஆராய்ந்ததிலிருந்து 'மகரிஷிகள் வனத்தில்வசிப்பார்கள்' என்றறிந்திருந்தாலும் 'அங்கு என்ன சுகம் கிடைக்கும்?' என்று நான் எண்ணுகிறவழக்கமுண்டு. அதுபேதமைதான் என்று நினைக்கிறேன்.

தோழி:-ஆம் தடை என்ன? தேவி! அதோபார். அந்தத் தடாகத்தில் அன்னப்பட்சிகள் நீந்துகின்றன. அதை அடுத்துள்ள வானளாவிய விருக்ஷங்களில் ஒருபுறம் மயில் கூட்டங்கள் தோகையை விரித்து ஆடுகின்றன. ஒருபுறம் பஞ்சவர்ணக்கிளிகள் பேசுகின்றன. இதோ வண்டுகள் ரீங்காரம் பாடிக்கொண்டு, ஒவ்வொரு புஷ்பச்செடியிலும் சென்றுசென்று, தேன் உண்டு வருகின்றன. அந்தப்புஷ்பக்கிளைகள் ஆடுவது நம்மை 'வாருங்கள் வாருங்கள்' என்று அழைப்பதுபோல் இருக்கிறது.

சாவி:- ஆம் சகிகாள்! என்ன ப்ரமாணந்தம்? தென்றல் காற்று 'ஜில்' என்று வீசுகிறது. பசி என்பதே தோற்றவில்லையே? நல்லது, நாம் சீக்கிரம் சென்று ஜலக்கிரீடை செய்து விட்டு, பூஜைக்குப் புஷ்பங்கொய்து செல்லலாம் வாருங்கள்.

தோ:-ஆம் தேவி! அது இருக்கட்டும். இன்னுமோர் விஷயம் உன்னிடத்தில் கேட்கவேண்டுமென நாங்கள் எதிர்பார்த்திருந்தோம். அதற்கு இதுதான் சமயமென்று நினைக்கிறோம்.

சாவி:-தோழிகாள்! அது என்ன விஷயம்? தெரிவியுங்கள்.

தோ:-உன்னுடைய விவாக விஷயமாய் அரசர் உனக்குத்தக்க ஒரு நாயகனைத்தேடி மணமுடிக்கப் பலவாறு முயன்றும் 'தகுந்தவரன் கிடைக்காதது' பற்றி உன்னைக் கூப்பிட்டு "சாவித்திரி! நீயே உனக்குத் தக்க நாயகனைத்தேடி யடையக்கடவாய்" என்று கட்டளையிட்டு, ஐம்பத்தைந்து தேச அரச குமாரர் படங்களையும் நீ காணும் பொருட்டுத் தந்தனுப்பியிருந்தனரே! அதில் எந்த தேசத் தரசகுமாரனை நீ மணப்பதாகத் தீர்மானித்தாய்? நாங்கள் அறிய வேண்டாமா என்ன!

சாவி:-தோழிகாள்! நீங்கள் அறியாத ரகசியம் என்ன இருக்கிறது? எல்லாப் படங்களையும் நான் பார்த்து, ஒவ்வொன்றாய்க்கிழித் துக்கடைசியில்! சால்வதேசத்தரசரான தியுமத்சேனனுடைய புத்திரன் "சத்தியவான்" என்பவரை என் நாயகனாகத்தேர்ந் தெடுத்திருக்கிறேன். அவர் முகவசிகரம் என் மனதைக்கவர்ந் தது. அவர் பல சிங்கக்கூட்டங்களையும் ஜெயிக்க வல்லவீர ரென்றும், சத்தியத்தில் சிபிச்சக்கரவர்த்தியையும், புத்தியில் பிரகஸ்பதியையும், பொறுமையில் பூமாதேவியையும் ஒப்பான வரென்றும், சாமுத்திரிகாலட்சணப்படி அவரது கம்பீர மான பார்வையினால் கண்டறிந்தேன்.

தோ:-சரி அவரைப்பற்றி நாங்களும் நன்குணர்வோம். ஆனால் இது விஷயம் அரசருக்குத் தெரியுமோ?

சாவி:-இன்னும் தெரியாது. இதைப்பற்றி என் அப்பா விசாரிக் கின்றபோது தெரிவித்துக்கொள்வோம்; அப்படித்தானே?

தோ:-ஆம் தடையென்ன! இதைப்பற்றி இனியோர்முறை பேசிக் கொள்ளலாம். இப்போது நாம் நீராடச்செல்லலாம் வா!

பட்வோ ஆயேசையாமேரி என்ற டான்ஸ் வர்ணமெட்டு.

இராகம்-பியாண்ட்-தாளம்-ஏகம்.

சாவி:-செல்லுவோம்-சேடிகாள் வாருங்கள் செய்யசெந்தாமரைத்
தெப்பக்குளத்தினில் சேர்ந்துநீராடிடவே (செ)

தோ:-தேவியே நல்லது சென்றுநீ ராடிப்பின் தெய்வபூஜைக்காகத்
தேடிமலரெடுப்போம்-பின்னல்தொடுப்போம்
சென்னிமுடிப்போம் (செ)

சாவி:-சிந்தை களித்தொரு சிங்கார மாமவே
எந்தன்பின்சேருங்கள் எல்லோருமாகவே-தான் (செ)

[செல்லுகின்றனர்]

[ஸ்நானம்பண்ணி உடைகளைமாற்றி, ஒவ்வொருவரும் வெவ்வேறு திக்குச்சென்று புஸ்பங்கொய்கின்றனர்.]

[சத்தியவானும் மாடவ்யனும் குதிரைமீது சவ்வாரி செய்துகொண்டு வருகின்றனர்.]

ஏழை மேலின்னும் வர்மமா என்ற மெட்டு.

இராகம்-நாட்டை-தாளம்-ஆதி.

பல்லவி.

பாண்டியகுல பாக்கியமே-சிறு
பாலன்யான் ஆளுவாய் (பா)

அநுபல்லவி.

தாண்டவம் புரி தாயே மகேஸ்வரி
சங்கரி வீரிமா தா மதுராபுரி (பா)

சரணம்.

மா மயிலுயிர மா தமலசத
மா உலகசுகம் மா தவியே
ஆய நின்பதத்தி லாசைவைத்தேனருள்செய்
அம்மாபாண்ட[illegible]ருஷ்ணா மிர்தத்தமிழ்வளர்த்த (பா)

சத்:-மாடவ்யா! இன்று காலையிலிருந்து இதுநேரம்வரை நாம் எங்கும் தங்காது வெகுதூரம் கடந்து வந்துவிட்டோம். ஆகவே,

பொல்லாதமாரன்கணை என்ற மெட்டு.

இராகம்-தேசிகபியாக்-தாளம்-ஆதி.

ஆயா சமேமகக்கு ஆனதாலிங்குமிக்கு
ஆனந்த மாகத்தங்குவோம்-தாகம்பசிநாம்
ஆற்றிச்சிறி துறங்குவோம்- பார்க்க
அந்தமதாகிய நந்தவனமிது சந்தோஷமெத்தவே சிந்தையில்தோன்றுது
அன்பாவா அங்குபோகுவோம்-வெயில்தணிந்து
அப்பால்நம் நாட்டுக்கேகுவோம் (ஆ)

மாடவ்யா! நமக்கு மிக்க ஆயாசமாயிருக்கிறதல்லவா?

மாட:-ஆம் ஆகையால் இவ்வனத்தில் தங்கிச் “சிறிதுநேரம் இளைப்பாறிப் பின் செல்லலாம்’ என்று நானும்நினைக்கிறேன்.

சத்:-சரி நீ நாகசாந்திசெய்துகொண்டிரு, நான் நந்தவனத்துட் சென்று திரும்பி வருகிறேன்.

மாட: அப்படியே! நீ அந்தப்பக்கம் சுற்றிவா. நான் இந்தப்பக்கம் சுற்றி வருகிறேன். வருஷக்கணக்கிலும் தங்கப் பிரியந்தான்.

[புன்சிரிப்போடு இருவரும் பிரிகின்றனர்.]

[சத்தியவான் பூஞ்சோலைக்குட் புகுந்து அதன் வனப்பைக்கண்டு அதிசயித்து]

பூங்காவினோதமே என்ற வர்ணமெட்டு.

இராகம்-தேசிகதோடி-தாளம்-ரூபகம்.

காணக்கண் காட்சியே கற்பகப் பூங்காவனமிது (கா)
காலமெல்லா மிங்கிருந்து சோலைமுழு தும்புகுந்து (கா)
கற்பிதமே மிதமே நவமேவுது அற்புதமே சுகமே நிஜமேவிது(கா)
ககனத்தளவுமே குலவித்திரிகிற கிளையிற்பழவகை யுதிர்க்குவியுது
கரும்போகமுகோவென மனமருளுது அரும்போமலரோ நறுமணங்கமழ்வது
கனியுமுக்கனிரசமும்பெருகுதுபுசியும்புத்தமிதினமும்விரவுது (கா)
கருநிறமேகமொ டொருநிறமாமென மயிலினமாடுது குயிலினம்பாடுது(கா)
கற்றுமொழுதவர் வருணனைபலபல எற்றுலும்மிதற்கெதுநிக ரெதுசொல()
காதம் வீசும் பரிமளம் கீதம் பேசும் கிளியினம்(கா)

வானத்தளாவிச்சென்று வளர்ந்தமரங்கள் நன்று
வர்க்கமெ னெத்தக பற்பல விற்பது (கா)

பேணுமல்லிகை சண்பகம் பிச்சி யொரு பாகமே
பின்னு மிருவாட்சி ரோஜா பேர் பெறுந் தடாகமே
சாணுக்குச் சானோர் கமுகு சந்தனமசோகமே
சார்ந்த பலா மாகதலி தானுமிங்க னேகமே

தாமரையில் வண்டி னங்கள் நாதம்-பட்சி
ஜாதிகள் பேசுது மறை வேதம்-கேட்க
ஆ..தில் நமக்கும் நல்லபோதம்-மனம்
ஆனந்தங் கொள்ளுது பிரமாதம்

ஆஸ்பதமில்லை நீதம் அதிசயமகாதம்
பாஸ்கரகிருஷ்ணர் கீதம் பாடப்பாட வினோதம்(கா)

ஆஹா! நாம் எவ்வளவோ தேசங்களை யெல்லாம் சுற்றிப் பார்த்து வந்திருக்கிறோம். ஆங்காங்குள்ள நந்தவனங்களின் ..னப்பையும் நாம் பார்த்துத்தான் இருக்கிறோம். ஆனாலும், இந்த வனத்தின் காட்சியைப்போல் நாம் எங்கும் பார்த்ததில்லையே!

"அமிழ்தினுமினிது மழலையர் மாற்றம், தமிழினுமினிது பண்பெறு மிசையே" என்ற முதுமொழியின் உண்மை இங்குதான் நாம் பிரத்தியச்சமாயுணருகிறோம். பொன்னிறம் போன்ற வண்டுகள் ஒரு பக்கம் இசைபாடுகின்றன. குயிலினங்கள் ஒரு பக்கம் சுரம் பிசகாது இராகம் பாடுகின்றன. மயிலினங்கள் அதற்கிணங்கத் தமது அழகிய தோகையை விரித்து ஆடுகின்றன. தடாகத்தில் தோன்றுகின்ற அலைகள் அதற்கொத்து மத்தளம் வாசிக்கின்றன. கிளியினங்கள் அதற்கிடையிலிருந்து அரிய தமிழ்நடையிற் பேசுகின்றன. ஆஹா என்ன ஆனந்தம்! குரங்குக்கூட்டங்கள் கும்பல் கும்பலாய் இரண்டு கால்களால் நடந்துவருவதும், பின் செல்வதும் பார்த்தால் இவ்வனம் ஒரு நாடக அரங்கம் போலும், அவைகள் அங்கு நடிக்கிற நடர்கள் போலும் தோன்றுகின்றது. நல்லது இன்னும் சென்று முழுவதும் சுற்றிப் பார்ப்போம். [செல்லுகிறான்]

[தருமறைவிலிருந்து ஒரு சிங்கம் கெர்ஜனையோடுபாய்கிறது. அபாயக்குரலில் ஒருபெண் அலறுகிற சத்தங் கேட்கிறது. சத்தியவான் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்க்கிறான்]

பாலபிஷேகப்பழனிமலை என்ற மெட்டு.

இராகம்-தேசிகவிபுக்-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

ஆஹாஇதுவென்ன ஆச்சர்யம் ஆச்சர்யம்
ஆங்கொருசிங்கமதோ ஓடுது
ஆரோ ஒருபெண் அபாயத்திற் சிக்குண்
டலறுங்குரல்கேட் டகம்வாடுது
ஓஹோயானிக்கண மோடியாங்குற்றந்த
ஒண்டொடிப்பெண்பா லுயிர் காக்கிறேன்
ஓராயுதமேனு மில்லையி னியதை
போசித்தென் சென்றொரு கைபார்க்கிறேன் (ஆ)

[வேகமாக ஓடி அச்சிங்கத்தை ஒரே அடியிற் கொன்று விட்டுத் திரும்புகிறான்-]

தோகையரு.

ஒருகணந்தலறுமென்குரல் உரந்ததோர்சிங்கமந்த
அரிவைமேற்பாய்ந்தடித்தே ஆங்கெடுத்தேகுமெந்த

119007

சரணத்தொடர்.

யாவன்பேரெதோ உணர்கிலன்யானே
ஆராயினும்மெனக் [illegible]வதென் தானே

பல்லவி யெடுப்பு.

ஓங்குதே ஆயாசம் ஈங்கிந்தமேடைமேல்
தூங்கியெழுந்தபின் ஊர்செல்லுவேன்

ஆஹா! இது என்ன சம்பவம்? நல்லது இதசமயம் நான் இங்குவந்து, அந்தச்,சிங்கத்தைக்கொன்றிருக்காவிட்டால், அந்தப் பெண்மணியின் கதி என்ன ஆகிறது? (திரும்பச்சென்றுசிங்கத்தை உற்று நோக்கி) எனதுகையிலே ஒரு ஆயுதமுமில்லை. இதை நான் கொன்றது எப்படி என்று எனக்கே தோன்றவில்லை (சிறிதுநேரம் யோசித்து) சரி, எனக்கு மிகுந்த ஆயாசமிருக்கிறது. அதோ இருக்கிற தருநிழல் மேடையின்மீது சற்றுச் சயனிக்கிறேன்,

[சென்று சயனிக்கிறான். இச்சம்பவத்தைப் பார்த்திருந்த சாவித்திரி திகிலடைந்து அங்குவருகிறாள்]

சாவி:-ஆஹா! இப்புண்ணிய புருஷன் யாரோ! இவர் என் இன்னுயுரைக்காத்த இளஞ்சிங்கம் ஆவர் இதுதருணம் இவர் வந்து இப்பேருதவி செய்திராவிட்டால், என் கதி அதோகதிதானே! இந்த அரண்மனைப் பூஞ்சோலையில் ஆரணியத்தில் வசிக்கிற கொடியமிருகம் வரக்காரணமென்ன? நல்லது அறிந்தேன். இரண்டொரு தினத்திற்குமுன் எனது அப்பா வேட்டையாடச்சென்றிருந்தனர். அங்கு ஒரு சிங்கம் வலை தப்பிச்சென்றுவிட்டதென்றும், பின்னர் அதைக்காணவில்லை என்றும் அதை அடுத்துள்ள கிராமவாசிகள் எச்சரிக்கையாய் இருக்கவேணுமென்றும்பறையறிவித்திருக்கின்றனர். அது தான் இச்சிங்கமென்று நினைக்கிறேன். (திரும்பிச்சென்று சிங்கத்தை உற்று நோக்கி) ஆஹா இவ்வளவு திடகாத்திரமான இதை இவர் எப்படிக்கொன்றனரென்பதுஎனக்கும் ஆச்சரியமே!(சிறிது நேரம் யோசித்து)இவர் இச்சிங்கத்தைக் கொன்றதினாலேயே களைப்போடு அயர்ந்து நித்திரைசெய்கின்றனர் போலும்?

"அருகுசென்று சத்தியவானை உற்றுநோக்கி" நாம் படத்திற்பார்த்த சத்தியவானைப்போல் காணுகிறதே!

தண்டபாணித்தெய்வமே என்ற மெட்டு.

இராகம்-தேசிக காம்போதி-தாளம் ரூபகம்.

பல்லவி.

என்னவீரம் என்னதீரம்
இன்னவராரோ இவ-ரிருப்-பதெவ்-வூரோ (எ)

அநுபல்லவி.

பொன்னுலவு சொர்ணமேவு
பூமான் சீமான் கோமான் ஆமாம் அடடா (எ)

சரணம்.

கன்னியாமென்னைக் கடுமையிற்பாய்ந்திட்ட
கானகம்வாழ்மிரு கங்களிலேதுட்ட
உன்னத சிங்கத் தயிலை வதைத்திட்ட
உத்தமமே சத்தியவான்
இத்தரைமேல் சத்தியவான்
உயர்குல குணமுள புயபல
முடையவர் ஒருசல பிரபல
ஊக்கமுளார் நோக்கிடிலென் பாக்கியமே
எக்கமினிப் போக்கிடல்சி லாக்கியமே (எ)

அநுசரணம்.

மாதவ னெகிக ராமென வேயிவர் மாவடி வந்திரு
மாதுறை தாமரையோ மதியோ வெது வோவதனந்தரு
வாசவனோசிவனோவல வானுறுவானவனோசல
வர்க்கத்தோ டிவர்நேசம்
வத்தித்தால் விசுவாசம்
வைத்திடக்கி டைத்தமுத்தி
மைக்கணிக்கி இல்ப்ரஸித்தி
மார்பிணைக்க மேயுரைக்க
மாமலைக்கு மானுமிக்க
வாட்டமறக் கூட்டுறவு கேட்டிடுவேன்
நாட்டமுடன் சேட்டுமேபா ராட்டிடுவேன்
மானில மேலரி தாமென மானிட ராவது நல்லறம்
வாழ்விவரோடி னிதாமென வாழ்வது வேபுகழில்லறம் (எ)

ஆஹா! இத்தகைய பேரழகுவாய்ந்த அரசிளங்குமரனை யான் இதுவரையுங்கண்டிலேன். இன்று இவரைக்காண என் கண்கள் செய்த பாக்யமே பாக்யம். ஏதோ இன்று இவரையான் கண்ட உடன் பின் விளைவது கருதாது என்மனம்இவர்மேல்சென்று விட்டது. சித்தம் சித்திரப்பதுமைபோல் அசைவற்றுநின்றுவிட்டது. பேச நாவெழவில்லை. நான் எடுத்த ஜென்மத்தின் பயன் இன்று தான் அடைந்ததாகக் கருதுகிறேன். "மக்கட்பிறவியிதில் மங்கையராய்த் தான் பிறந்தால் தக்க ஒருவரைத்தான் கூடி வாழ்வினிது" என்றபடி இத்தகைய பூமானை மணந்து, வாழ்வதே இல்வாழ்வு. கொடியசிங்கத்தினிடத்திலிருந்து மீட்டிக்கொணர்ந்த இவ்வுடலும் உயிரும் இவருக்கே சுவாதீனமாய் விட்டபடியால் இவரே எனக்குத்தெய்வம், நல்லது, இவர் அயர்ந்து நித்திரை செய்கிறார். இவரது நித்திரைக்குப் பங்கமுறாது நாம் பாதுகாத்தல்வேண்டும்.

[அசைவற்று நிற்கின்றாள். சத்தியவான் நித்திரை விட்டு எழுந்து சாவித்திரியைப்பார்க்கிறான்.]

மார்க்கத்திற்கண்டகனி என்ற வர்ணமெட்டு.

இராகம்-கானடா-தாளம்-ஆதி.

சத்:- இந்த வனத்தினில் ஏன் தனித்து வந்தாய்
　　　வந்திழைநீயெந்த ஊரோ-ஐயா

சாவி:- இங்கென்னைப் பாயும்பெரு திம்மிருகத்தைக்கொன்
　　　றின்னுயிர் காத்தீரோ ரோ

சத்:-ஏ பெண்பாவாய்! உன்னைப்பார்த்தால் இராஜ புத்திரியைப் போல் தோற்றுகிறது. சேடியரின்றித் தனித்துஇங்கு தங்கி விட்டகாரணம் என்ன?

சாவி:-தாங்கள் கேட்டகேள்விக்குவிடையளிக்காததுபற்றிஎன்னை மன்னிக்கவேண்டும். ஆபத்துவேளையில்இங்குவந்துஎனது ஆருயிரைக் காத்தளித்த தாங்கள் யார்?

சத்:- ஆரென்று கேட்டநின் ஆருயிர் காத்தது
　　　ஆண்டவனென்றறி மானே - அந்த

சாவி:- ஆண்டவன்போலவே ஆபத்திலெந்தனை
　　　ஆதரித்தீர் புண்ய வானே

மதிவதனி! நீ கேட்ட கேள்விக்கு விடையளிக்காததைப் பற்றி நீ என்னை மன்னிப்பாயாக. "அவனன்றி ஓரணுவும் அசையாது" என்ற எதார்த்த வசனப்படி நின் உயிரைக் காத்தது கடவுள் ஒருவனே என்று அவன் மீது பக்தி செலுத்து.

சாவி:-சிரீளங்குமார! உண்மையதுதானாயினும் அவரவர் செய்த நன்மைக்கும் தீமைக்கும் தக்கபுகழ்வும், இகழ்வும் அடைவது ஆன்மகோடிகளே அன்றிக் கடவுள் அல்லர். கடவுள் தங்கள் மூலம் என்னைக் காத்தாராதலின் முதன்முதல் தங்களைத்தான் என்மனம் பக்தி பண்ணும்.

சத்:- வானிலிருந்து மின் வந்தது போல்மேனி
மங்காய் ஏனோமன வாட்டம் - தாங்கள்

சாவி:- வந்த இடத்திலும் மாதென்று தங்கட்கு
வாய்த்த சிரமமே தேட்டம்

மின்னொளிர் மேனியாய்! நின் கருத்து முற்றும் ஏற்றுக்கொள்ளற்பாலது. ஆனால், 'அகத்தினழகு முகத்தில்தெரியும்'' என்றபடி ஏதோ ஒன்றைப்பற்றி நின்மனம் சிந்தித்து வாடுகிறதுபோலும்?

சாவி:-ஆம் அது சரிதான்! ஏதோ காரியார்த்தமாக வந்த தங்களுக்கு என்பொருட்டு, இவ்வளவு சிரமம் ஏற்பட்டுவிட்டதே! இதற்கு "என்ன கைம்மாறு நான் செய்யக்கூடும்" என்று என்மனம் இப்போது சிந்திக்கிறது.

சத்:- தேட்டம் பிறருக்குத் தேடியுதவுதல்
செய்யிடில் புண்யம் வேறேது - தாங்கள்

சாவி:- செய்தவுதவியென் சீவனுள்ள மட்டும்
சிந்தனையில் மறவாதே

பெண்பாவாய்! "பிறர்க்குதவி கைம்மாறு பேணுதியற்றிடுக" என்றபடி எவரிடத்தும் பிரதிப்பிரயோஜனம் கருதாது உதவுதல் வேண்டும். அதுதான் மானுடவாழ்வுக்குற்ற மகிமை. ஆகவே அதைப்பற்றி நீ சிந்திக்கவேண்டாம்.

சாவி:-இளவரசே! என்னிடத்தில் தாங்கள் யாதொரு உதவியும் எதிர்பார்க்கமாட்டீர்கள். என்றாலும், என் சீவனிருக்கிற பரியந்தம் தாங்கள் செய்த இப்பேருதவியை என்னால் மறக்க முடியாது. ஏன் நிற்கிறீர்கள்? மேடையில் அமருங்கள்.

அதிர்ஷ்டம்வந்திட்டபோது என்ற மெட்டு.

இராகம் தேசிக பியாக்-தாளம் ஆதி.

சத்:- வாதுசெய்த இவ்வேங்கை வாழ்வுயிர் போக்கி
மயங்கியே சிறிதுநோந் தேனே - நீர்

சாவி:- வாடிமயங்கி மெய் வருந்துவீ ரென்றே நான்
வருத்த மாற்றவந் தேனே

பொற்கொடி! இந்தச் சிங்கத்தோடு நான் வாதாடினபடியால் எனக்கு அதிக அசதியுண்டாகிறது. இன்னும் சிறிதுநேரம் இங்கு நான் சயனித்துக்கொள்ளுகிறேன்

சாவி:-ஆஹா! நன்றாய்ச் சயனித்துக்கொள்ளலாம். தங்கள் சிரம பரிகாரத்தின் பொருட்டே நான் இங்கு வந்தது.

சத்:-ஆனால்சரி! அதற்காக நான்நன்றிபாராட்டுகின்றேன். நீயேன் நின்றுகொண்டேயிருக்கிறாய்?

சாவி:-பாதகமில்லை. தாங்கள் சயனித்துக்கொள்ளுங்கள் நான் இங்கு அமருகிறேன்.

[ஒருபுறம் ஒதுங்கி அமர இடம் பார்க்கிறாள். சயனித்தவன்மீண்டும்எழுந்து]

சத்:- தேனே இங்குன்னையது சீறிப்பாயும்வேளை
திக்கில்லை யென்றெண்ணி நொந்தாயோ-ஜன்

சாவி:- சித்தமுங் கலங்கியே தெய்வத்தை வேண்டினேன்
செய்வது வேறின் தென்னேபோ

வஞ்சிக்கொடியே! சிங்கம் "உன்னைச் சீறிப்பாய வருகிறது" என்று கண்டவுடன் உன்மனம் எவ்வாறு கலங்கிற்று?

சாவி:-என்னால் என்ன கூடும்? தெய்வத்தைத்தான்வேண்டக்கூடும்.

சத்:-பெண்பாவாய்! "கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச்சொற்களென்னபயனுமில" என்ற பொய்யாமொழிப் படி நாமிருவரும் ஒருவரை ஒருவர் நோக்குகிற பார்வையினாலேயே நின்மனதின் தன்மையை நானும், என் மனதின் தன்மையை நீயும் நன்குணர்ந்தோம். ஆகவே நின்னிடம் ஒன்று கேட்க நினைக்கிறேன், ஏன் கேட்கலாமல்லவா?

சாவி:-கேளுங்கள், எனக்குத் தெரிந்த வரையிலும் நான் தங்கள் கேள்விக்கு விடை பகரச் சித்தமாயிருக்கிறேன்.

ஓஹோஹோ நங்கிநேன்ன என்ற மெட்டு.

இராகம்-பார்ஸி-தாளம்-ஆதி.

கண்ணிகள்

சத்:- அன்னமே யுனக்குக்கலி யாணமுமிங் கானதா
சாவி:- ஐயனே எனக்குக்கலி யாணமுமிங் கானதே
சத்:- ஆனதா ஆனுலுன்மண வாளன்பே ரென்சொல்வாய்
சாவி:- அன்னவர் பெயரா சத்ய வானென்றே சொல்லுவார்
சத்:- ஆ ஆ அவன்பேர் சத்தியவானு
சாவி:- ஆம் ஆம் அவர்பேர் சத்தியவானே
சத்:- அது நிஜமா
சாவி:- அது நிஜமே
சத்:-ஆச்சரிய மாயிருக்கு தம்மொழி நிஜமல்ல
சாவி:-ஆதரித்த தங்களிடம் அன்பரேயேன் பொய்சொல்ல
சத்:-அப்படியாவிது செப்படிவித்தை எப்படியானிதை ஒப்புவேன்
சா:-ஐயமுமேனே பொய்புரையல்லமெய்புரையாகவேசெப்புவேன்

வசனப்பாட்டு.

சத்:- ஆமதுசரி மாமணம்புரி நாளது முனமே
சாவி:- ஆவதுதிரு மாமணமினிமேலொரு தினமே
சத்:-ஓஹோ! இனிமேல்தான் விவாகம் நடக்கப்போகிறதா?
சாவி:-ஆம் இனிமேல் தான்!
சத்:- சத்தியவானென்ருல் அவன் எந்த நாட்டைச் சார்ந்தவன்?
சாவி:-சாலவபுரிக் கரசனுகிய தியுமத்ஸேனரின் செல்வப்புத்ரன்.

[வியப்படைந்து சிறிதுநேரம் ஆலோசித்து]

சத்:-அப்படியானுல் நிச்சயதாம்பூலம் ஆய்விட்டதா?
சாவி:-பரஸ்பரம் ஆய்விட்டால் போதாதா?
சத்:-அப்படியா! அப்படியானுல் உன்னுல் எனக்கு யாதொரு உதவியும் செய்யமுடியாது. சற்று நேரத்திற்குமுன் "இவள் நின்மீது நிறைந்த காதலடையப்பெற்றனள் என்றும், நீதான் அதை நிவர்த்திக்கவேண்டும்" என்றும் நின் நயனவிழிப் பார்வை எனக்குச் சிபார்சுசொல்லிற்று, அதுகற்பிற்கழகோ?

சாவி:-ஐயா! உள்ளத்தில் ஒன்றைமறைத்து, வெளியில் ஒன்றைப் பேசாத உத்தமத் தன்மை ஒன்றே கற்பிற்கழகு. இது பற்றியே "கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை" என்று ஆண் பெண் இருபாலருக்கும் பொதுவாய்க் கூறுகின்றன. என்பிராணனைத் தாங்கள் காத்தபடியால் 'தாங்களே பிராணபதியாகுதல்வேண்டும்' என்ற ஒருமுறைபற்றி என்மனம் தங்களை அடைய முயன்றது "சத்தியவானே கணவன் என்று பரஸ்பரமாய் வரித்த நீ இப்போது இவரையடைய நினைத்தது தவறு. இவர் பிராணனைமட்டுங் காத்தவர். பிராணனைவிடச் சிறந்தவஸ்துவாகிய 'கற்பை' நீகாத்துக்கொள்ளல்வேண்டும்" என்று அறிவு மனதைத்தடுத்துவிட்டது; இதுதான் விஷயம்.

சத்:- அப்படியானல் பதிவிரதைகள் தங்கள் கணவனைத் தவிர்த்து, மற்றவர்களை மனதில் நினைத்தாலும் 'கற்பழிந்தவர் ஆவர்' என்று ஆன்றோர் கூறுகின்றனரே! அதுதவறு?

சாவி:- விருத்தம்.

நூறுபேர் தமைமணந்தும் நுண்ணிடை மாதொருத்தி
வேறொரு கணவன் தன்னை விரும்புதல் மனத்தின் தன்மை
கூறிடில் குற்றமீது குணமிதென் றுணர்ந்து சிந்தை
தேறுதல் அறிவின் தன்மை தெளிந்தவர் கற்புளாரே.

ஒருஸ்திரீ நூறுகணவனை மணந்திருந்தாலும்இன்னும் சிலரை மணந்தோமில்லையே என்றெண்ணுவது சகசம். அது மனத்தின் தன்மை; கற்பிற்கும் அதற்கும் சம்மந்தமேயில்லை. ஆனல் அது முறையன்று என அறிவு மனதைத்திருத்துதல் வேண்டும். அது தான் கற்பு. கண், செவி, வாய், நாசி, மனம் என்னும் பஞ்சேந்திரியங்கள் பொதுவில் தன் தொழிலை நடத்திக்கொண்டேயிருக்கும். "இதுமுறைஇதுமுறையன்று" எனப்பகுத்து அவற்றைநடத்துதற்காகவே இவை எல்லாவற்றிற்கும் மேலாய்க் கடவுள் நமக்கு அறிவைத்தந்துள்ளார்- அறிவு மனதின் வழிச் சென்றுலொழிய, பாப கன்மங்கள் நடைபெறவேமாட்டா. மனம் அறிவின்வழிச் சென்றுலொழிய புண்ணிய கன்மங்கள் நடைபெறவேமாட்டா. இதுவே மேலோர் துணிந்த துணிபு. மேலும் எதார்த்தமான சற்புத்திரனொருவன் ஒரு அழகிய ஸ்திரீயைக்கண்டால் அவன் மனம் அவள் மீதுசென்று பின் அறிவினுல் அதைத்தடுத்துக் கொள்ளுவதன்றி

"மனது செல்லாமலே இருந்தது" என்பது, "நெருப்பு, சுடாமலே இருந்தது" என்பதை யொக்கும். அங்ஙனமே ஒரு அழகிய புருடனைக் கண்டு அவன் மீது சென்ற மனதைத் தன் அறிவினால் அடக்கிக்கொள்பவள் கற்பரசியாவள். அனுபவத்திற்குஒத்திருப்பது தானே சுருதி?

சத்:-ஆம்! அது சரிதான்! கல்விக்களஞ்சியமே! அரிய பெரிய உனது இனிய வாய்மொழிவசனம் என்னைநல்வழியிற் புகுத்தி விட்டது. உன் பெயரென்ன என்றறிய நான் ஆவலுறுகிறேன்.

சாவி:-வேந்தே! இந்ததேசந்தான் மத்ரதேசம். இதை ஆளப்படுகிறவர் என் தந்தை அசுவபதி என்பவர். என் தந்தைக்கு நான் ஒரே புத்திரி; என்பெயர் "சாவித்திரி" என்பார்கள்.

[சத்தியவான் காதலும் வியப்பும் கலந்து தோன்ற இருகரங்களையும் நீட்டி]

தர்ஜேதர்ஜே மேரிபஜான என்ற மெட்டு.

இராகம்-பார்ஸி-தாளம்-ஏகம்.

சத்:-ஆனால் கண்ணே சத்தியவானென் றழைக்கப்படுபவன் நான்தானே
சா:-அப்படியா அப்படியா ஆச்சரியந்தானே
சத்:-ஐயப்பாடே தேனுமுண்டோ ஆசை நேசியே
சா:-அடியாளையாட் கொள்ளவேணும் யான்விஸ் வாசியே

வசனப் பாட்டு.

சத்:- ஆனந்தப் பெருக்காய் நீவந்து சுருக்காய்
ஏனிங்கெந்தனுக்காய் ஓர்முத்தங் கொடுப்பாய்
சா:- ஆவல்கொண்டேன் நானே மேவுமென் பூமானே
தேவியென்றுந்தானே ஏவல்செய்குவேனே
சத்:- ஆசைமெத்தவும் நீயுரைத்திடு வாசகத்தினி லேஜனித்தது
அன்னமேநீ விரைவாய் அருகாய் வருவாய்
சா:- ஆதரிப்பது நீரெனைத்தனி காதலித்தது யானுமைத்தனி
அப்படியே வருவேன் சுகமே பெறுவேன்

[ஒருவருக்கொருவர் முத்த மிட்டுக் கொள்கின்றனர்]

மேலெடுப்பு.

சத்:- ஆலவாய் பாஸ்கர கிருஷ்ணரோதும் - வண்ணம்
ஆகா இந்தமுத்தம் ஒன்றேபோதும் (ஆ)

சா:-சீலமனோகரா சிங்காரசேகரா
செல்வோ மினி சோலைக்குள்
செல்வோ மினி நேராய்

சத்:-தேவிநீ முன்போ நானும்பின் வருவேன் (ஆ)

பிராணகாந்தி! நீ எவ்வாறு என்னைப்பற்றிச் சிந்தித்து நின் மனத்தினிடத்து என்னை வரித்தனையோ, அவ்வாறே யானும் நின்னைப்பற்றிச் சிந்தித்து என்மனதினிடத்து நின்னை வரித்திருக்கின்றேன். இது தான் பரஸ்பரம் என்பது.

[சத்தியவான் தன் கணையாழிகைக் கழற்றிச் சாவித்திரி விரலி லணிய முயலுகிறான். சாவித்திரி அக்கணையாழியிலுள்ள "சத்தியவான்" என்னும் பெயரை வாசித்து நாணத்துடன் தன் விரலை நீட்டுகிறாள்.]

(இங்கு மௌனக் காட்சி)

[சாவித்திரி சத்தியவானின் கரத்தைத் தன் கரத்தால் பற்றியவண்ணம்.]

மைகேந்தபேகுருபான் என்ற வர்ணமெட்டு.

இராகம்-தேசிககமாஸ்-தாளம்-ஆதி.

பல்லவி.

தெய்வம்போ லேயென்முன் வந்தீர்-நல்ல
தெரிசனம் தந்தீர் (தெ)

அநுபல்லவி.

நான்-தேடித்தேடித்தியங்கிடாமல்வாடிவாடி மயங்கிடாமல்(தெ)

சரணம்.

செய்தவ மேசிறந்து
சேயிழையெ னேருகந்து-மன துவந்து
சிந்தாகு லமிகுத்து
சிங்காரப் பூவனத்து
சிம்மமொன்றோடெதிர்த்து-போர்தொடுத்து
தேவரீரெ னுயிர்காத்து மேவியநற் காலம்பார்த்து (தெ)

[சத்தியவான் அவள் புஜத்தைத் தன்கரத்தால் தழுவியவண்ணம்]

சத்:-

டை பல்லவி.

மைவிழிமானே என்ஜாலம்-இது
வசந்த காலம் (மை)

அநுபல்லவி.

மணம்-வாடிடாமல் கூடியின்று மாவனத்தைப் பார்ப்போம் சென்று (மை)

சரணம்

ஒய்யாரமீ தென்னசிரு
ஓஹோரமயி லாட்டம்பாரு-மனதுதேரு
ஒண்டொடிப் பெண்ணேகாட்சி
உகந்தநல் லிருவாட்சி
உண்டோவிதற் கத்தாட்சி-உயர்ந்தமாட்சி
ஒருமனதுடன்உரிமையடைந்தோம் இருமணமினிப்புரியச்சிறந்தோம் (மை)

[ஒருவரை ஒருவர் தழுவியவண்ணம் இருவரும் அவ்வனத்தைச் சுற்றிப்பார்த்து வருகின்றனர்]

பிரியவதனி! நான் தனித்து இவ்வனத்தைச் சுற்றிப்பார்க்கிற பொழுது எனக்கு ஏற்பட்ட ஆனந்தத்தைவிட இப்பொழுது அதிக ஆனந்தம் எனக்கேற்படுகிறது.

சாவி:-நாதா! “காதலிருவர் கருத்தொருமித் தாதரவுபட்டதேயின்பம்” என்றபடி எனக்கும் அவ்வாறே ஆனந்தம் ஏற்படுகிறது. உருவத்தால்மட்டும், நாம் ‘இருவர்’ என்றாலும் அன்பின்வழி நாம் ஒருவர் தானே?

சத்:-என் ஆருயிர்க்காதலி! அதற்கென்ன தடை? “ஆவியின்றி உடலில்லை உடலின்றி ஆவியில்லை அதுபோல் பர்த்தா தேவியென்பர் இருவர்தாம் ஒன்றுஇல்லறமலரும்தேனும்போல” என்றபடி நீ என் உடலும் நான் உன் உயிரும்போன்று இங்கு ஒருங்கு கூடினோம். இன்று நாம்கொண்ட இவ்வுறவு ‘தரும் தரும்’ என்று சொல்லுமாப்போல் அதோபார் அப்பூங் கொம்புகள் அசைந்து ஆடுகின்றன.

இருவரும் அங்கு நோக்குகின்றனர். சத்தியவான் ஏதோ யோசித்து, அவளது புஜத்திற் கிடந்த தனது கைகளை எடுத்துக்கொண்டு.]

விருத்தம்.

ஆசையே அன்பே எந்தன் ஆருயி ரனைய தேவி
மாசிலாவனிதாத்ன மடந்தையொன் றுரைப்பேனிங்கு
தேசசஞ்சாரஞ்செய்து திரும்பினேன் யான்போய்வந்து
நேசமாய் மணப்பேனுன்னை நீவிடை யருள்வாய்மாதே.

கண்மணி! நான் தேசசஞ்சாரஞ்செய்யும்பொருட்டுவந்தவன் ஒருகணமும் என்னைப்பிரிந்திருக்கச்சகியாதஎன் தந்தையும் தாயும் என்பிரிவாற்றாமையால் வருந்திக்கொண்டிருப்பர், ஆகவே நான் சென்று அவர்களைக்கண்டு இராஜ்ய விஷயங்களைப்பற்றி வினவியறிந்து கூடியசீக்கிரம் இங்கு வருகிறேன். 'சுயம்வரம்'என்றமுறைப் படி நாமிருவரும் மணந்துகொண்டோமாயினும் இவ்விஷயத்தை என் தாய் தந்தையரிடத்து நானும், நின் தாய் தந்தையரிடத்து நீயும் தெரியப்படுத்தி நம்வழிக்கு அவர்களைத் திருப்பவேண்டிய ஒரு கடமையும் இருக்கிறது. அதன்பின் உலகமறிய நாம்திருமண விழா நடத்திக்கொள்ளுதல்வேண்டும். ஆகவே நின் அமுதவாய் திறந்து சீக்கிரம் எனக்கு விடையளிக்கவேண்டும்.

[சாவித்திரியின் அலர்ந்த செந்தாமரையைப் போன்றமுகம் உடனே வாடுகின்றது. இரு விழியிலிருந்தும் நீர்த்துளி ததும்புகின்றது. சத்தியவானின் கரத்தைப்பிடித்துத்தன் கண்களில் ஒற்றிக்கொண்டு பொருமியவண்ணம்.]

மதினமேமோராசையா என்ற மெட்டு.

இராகம்-அமீர்கல்யாணி-தாளம் ரூபகம்.

பல்லவி.

மாதெனைப்பிரிவதற்கு மனம்வந்ததோ-நாதா
மனம்வந்ததோ (மா)

அநுபல்லவி.

பேதகந்தானோ பேசுவதேனோ (மா)

தொகையறா.

ஆதாரமுங்களை அன்றிவேறினியெனக்
காருமேஇல்லை சத்யம்
அன்னையும் தந்தையும் ஆளனைப்பெற்றபின்
ஆவரோ அஃதனித்யம்.

சரணத்தொடர் முடுகு.

அந்தரமாகவிட் டகலுதல்நன்றோ
சுந்தராரூபிணிச் சுகித்திடலென்றோ

பல்லவி எடுப்பு.

அன்பிற் கலந்துகூடி
இன்புற்றிடுவோம் நீடி (மா)

சத்:- ஷை பல்லவி.

நானுனைமறப்பதில்லை நவிலவதேனோ-கண்ணே
நவிலவதேனோ (நா)

அநுபல்லவி.

வாளெடுபோதும் மாறுவதேனும் (நா)

தொகையறா.

மானேநீவாடாதே வாரமிங்கொன்றினில்
வந்துன்னைக் காணுகின்றேன்
மனதிலும் வாக்கிலும் வஞ்சியேயுன்னையான்
வழுவாது பேணுகின்றேன்

சரணத்தொடர் முடுகு.

மைந்தனைக்காணவே மருவிடுவார்கள்
தந்தையுந்தாயுமே தயங்கிடுவார்கள்

பல்லவி எடுப்பு.

மன்னித்துக் கொள்வருவேன்
கன்னிகலந் தருவேன் (நா)

[சாவித்திரியின் கண்ணீரைச்சத்தியவான் துடைத்துவிட்டுக் கன்னத்திற்கொஞ்சி]

காதலி! நீ ஏன் கவலையடைகின்றனை? வேண்டாம். நின்னை விட்டுப்பிரிந்திருக்கிற ஒவ்வொரு நிமிஷமும் எனக்கு ஒரு யுகமே. உன்னைவிடச் சிறந்த பொருள் உலகத்தில் எனக்கு ஒன்றுமில்லை என்பது நிச்சயம். என் இருதய ஆலயத்தில் நீயும், நின் இருதய ஆலயத்தில் நானும் இடைவிடாதிருக்கின்றோம். மேலும் "இல்லாளுடனிருந்து இல்வாழ்தல் மூன் முனிதே" என்ற நீதி வாக்கி

யத்தை நான் மறந்தவன் அல்லன். ஒருவேளை என் உயிரையே நான் மறுதலிக்க நேரிடினும் என்னால் நின்னை மறுதலிக்கமுடியாது

[சாவித்திரி திடீரெனச் சத்தியவானுடைய கரத்தை விட்டுவிட்டு, விலகிநின்று பூமியைப்பார்த்தவண்ணமாய் முகஞ்சோர்ந்து]

போதும்! உயிரையே என்றுஏகாரம்வைத்துவிட்டீர்கள். அதனால் உயிரைவிடச்சிறந்தபொருள் உலகத்தில் ஒன்றுமில்லைஎன்று பொருள்படுகிறது. சற்று நேரத்திற்குமுன் "உன்னைவிடச்சிறந்த பொருள் உலகத்தில் எனக்கு ஒன்றுமில்லை" என்று சொன்னீர்களே! இவ்வார்த்தை ஒன்றுக்கொன்று முரண்படுகிறபடியால் நான் ஒன்றையும் நம்புதற்கு முடியவில்லை.

சத்:-பூந்தத்தாய்! காலமெல்லாம் வறுமையடைந்து வருகிற ஒரு பரமதரித்திரனுக்குத் திடீரென்று ஒரு புதையல் கிடைத்துவிட்டால் அவன் எவ்வளவு ஆனந்தமடைவானோ அவ்வளவு ஆனந்தம் நின்னைக்காதலியாய்ப்பெற்ற நான் அடைந்தேன். ஒரு மனிதனுக்கு அளவுகடந்தஆனந்தத்திலும், அளவுகடந்த துக்கத்திலும் அவன் நாவு தடுமாடுகிறது சகசந்தானே? அதற்காக என்னை மன்னிக்கவேண்டும். "உன்னைவிடச்சிறந்த பொருள் உலகத்தில் எனக்குஒன்றுமில்லை" என்றுமறுமுறையும் உறுதிபெறச் சொல்லுகிறேன்.

[சாவித்திரி புன்னகையுடன் சத்தியவானைக் கடைக்கண் நோக்கி]

என் ஆருயிர்க்காதல! "உயிரினும் பெரியவள் உத்தம பத்தினி, பத்தினிக்கின்னுயிர் பர்த்தாவாமே" என்ற வாக்கியத்தின் ஒருசூட்சமத்தைப் பாருங்கள். ஒரு நாயகனுக்கு அவனது நாயகி அவன் உயிரினுஞ் சிறந்தவள், ஆனால் நாயகிக்கு நாயகன் அவள் உயிருக்குச் சமானமானவன்; அல்லவா?

சத்:-ஆம் என் அன்பே! அதற்கென்ன ஆட்சேபனை? இந்த வாக்கியத்தினால் புருஷர்களைவிட ஸ்திரீகளே உயர்ந்தவர்கள் என்று நான் நன்குணர்ந்தேன், [கன்னத்தில் முத்தமிடுகிறான்.]

சாவி:-காதா! அப்படிக்கல்ல. பதிவிரதைகளுக்குத் தன் கணவனே தெய்வம் என்பது வேதவாக்கு. அஃதன்றி, புருஷர்களைவிட ஸ்திரீகளே உயர்ந்தவர்கள் என்பதை உலகம் எப்படி ஒத்துக்

கொள்ளும்? இப்படித்தான் நூலாசிரியர்கள் கருத்தொன்றியிருக்க உரையாசிரியர்கள்வேறொன்றெழுதிக்கொண்டுபோவது வழக்கம். பின் ஒன்றுக்கொன்று முரண்பட்டு, சர்வ சந்தேகத்தில் கொண்டுவந்து விட்டுவிடுகிறது. புருஷர்கள் தங்களைத்தாமே காத்துக்கொள்வதுடன் ஸ்திரீகளையும் காப்பாற்றக்கூடிய ஆண்மையுள்ளவராயிருக்கிறார்கள். ஸ்திரீகள் அப்படியல்ல, பால்யத்தில் தாய் தந்தையர்களாலும், எவ்வனத்தில் தம் நாயகராலும், விர்த்தாப்பியத்தில் தம் பிள்ளைகளாலும் பராமரிக்கப்படுகிறவராயிருக்கிறார்கள். ஆகவே நாயகி தன் நாயகனைப் பிராணனைப்போல் அன்பு பாராட்டவேண்டுமென்றும், நாயகன் நாயகியைத்தன் பிராணனைவிடப் பதின்மடங்கு அன்பு பாராட்டவேண்டுமென்றும் ஸ்திரீகளின் பொறுப்பைப் புருஷர்கள் தலையிற் சுமத்தப்பட்டிருக்கிறது.

சத்:-என் காதற்கிளியே! அழகிய பவளம்போன்ற செவ்விதழ் குவிந்த நின் அமுதவாய்ச்சொற்களை இன்றுநான் செவியாரக் கேட்டு, அடைந்த 'இன்பம்' இலக்கணஞ்செறிந்த தனித்தமிழால் தொடுக்கப்பட்ட செய்யுட்கள் இடத்தும் இதுவரை நான் அடைந்திலேன். இங்கு நம்மைக்கூட்டிவைத்த தெய்வம் இனி ஒருவாரத்துள் நம்மைச்சேர்த்துவைக்கும் என்பது நிச்சயம். ஆகவே நீ சந்தோஷமாய் எனக்கு விடைகொடு.

சாவி:-ஆம் பிராணபதி! நாம் பிரியவேண்டியதும் அவசியந்தான்; ஆனால், இனிநான் தங்களை மறுபடியும் எப்போது காண்பது?

சத்:-கண்ணே! இன்னும் ஒரு வாரத்தில்; இது சத்தியம்.

சாவி:-காதலா! பின் நிகழ்வன எப்படியோ; ஆதலின் சத்தியம் வேண்டாம். ஆயினும் ஒன்று சொல்ல நினைக்கிறேன்.

தில்பாநஹி என்ற மெட்டு.

இராகம்-தேசிகதோடி-தாளம்-ஏகம்.

ஓதுவதொரு சேதியெனது நாதனே யானே-துயர்
ஓங்கி ஏங்கி உரிமையில்தானே (ஓது)

தீதுபுரிந்திட ஒருசிங்கம்
தீவிரமாகவே என்மீது-நனி
சீறிவந்திடுமுனர் நேரில்வந்துதவிய
செய்நன்றி மறவாது-அடியாள்

செல்கிறே ளிப்போது - தாங்கள்
சென்றபின் வாராது-போனுல்
தெரிலவையென் கதியாது-மனம்
தேரேன் ஆரேன்
சித்தங் தரியாது (ஒது)

[கமலம் போன்ற இருகண்களினின்று
கண்ணீர் முத்துப்போல் திரண்டுவிழ]

என் பிராணநாதா! தாங்களும் செல்லவேண்டியது அவசியந்தான். நானும் என்பிதா மாதாவிற்கு இங்கு நடந்த சம்பவங்களைச் சொல்லவேண்டியது அவசியந்தான். ஆகவே இங்கு நாம் பிரியும்படி நேரிடுகிறது. என்றாலும் தாங்கள் சொல்லுகிறபடி இன்னும் ஒரு வாரத்திற்குள் நீங்கள் வராவிட்டால். பின் ஏதையும் நான் எதிர்பாராது உயிர்விடுவது சத்தியம்.

[சத்தியவான் அருகிற்சென்று மறுபடியும்
அவள் கண்ணீரைத்துடைத்து முத்தமிட்டு]

பகாரியாலாதேக்கோ என்ற வர்ணமெட்டு.

இராகம்-தேசிகதோடி-தாளம்-ஆதி.

பல்லவி.

கலாவதியே கண்ணே கவலை கொள்ளாதே (கலா)

அநுபல்லவி.

கருதுசிறிதுகருதுநமது காரியங்கைகூடும்
கடவுள் கிருபை புரிவ ரிருவர் கடிமணங்கூடும்-நமது
கற்பிவண்ணீடும்
காதலிருவர் கருத்தொருமித்தனம்
ஆதவில்தம்பதி யானேமித்தினம் (கலா)

சரணம்.

காந்தர்ரப்பண்ணிசைக்கும் கன்னல்மொழிமாமயிலே
கற்பகத்தருவனத்துக் காட்சியெனும்பூங்குயிலே
காருண்யப்பேரரசி கலைமதிமுகச்சாசி
கற்பினைக்கோராசனிமே கனகமணிப்பூசணமே
கட்டழகி மட்டிடாக் களிப் படைந்தே னின்று

கனமே சென்று-எந்தை
மூனமே நின்று
காரிகையேயொரு வாரங்கழியுமுன்
நேரில்உனைக்காண வாரேனருமைக் (கலா)

கண்ணே! வேண்டாம். நீ கலவரப்பட்டு வீணே நின் மனதைச் சஞ்சலத்தில் ஆழ்த்திக்கொள்ளாதே! நின் அன்பின் பெருக்கென்ற சாகரத்திற்கிடந்து நான் நீந்துகின்றேன். என்பொருட்டு நீ உயிர்விட என் உயிர் தரித்திடாது. நான் போய் வரட்டுமா?

[ஒரு பக்கம் சாவித்திரி என்ற சத்தமும், ஒருபக்கம் இளவரசே என்ற சத்தமும் கேட்டு ஒருவரை ஒருவர் பிரிய மனமிலாது செல்லுகின்றனர்]

[சாவித்திரியும், தோழிகளும் நிகழ்ந்தனவற்றைப்பேசிக்கொண்டே அரண்மனை செல்லுகின்றனர். சத்தியவானும், மாடவ்யனும் பிரயாணப் படுகின்றனர்.]
காட்சி முடிகிறது.

இரண்டாம் அங்கம். காட்சி ஒன்று.

இடம்:-ராஜரிஷிகள் தவம்புரியும் ஆரண்யம்.

நடர்:-துயுமத்சேனன், பத்மாக்ஷி, சத்யவான், மாடவ்யன் தவரிஷி முதலியோர்.

துயு:-கண்மணி! இத்தனை நாட்கள் ஆயும் நமது புத்திரன் வரவில்லை! காரணம் என்னவோ தெரியவில்லை. இரவும் பகலும் எனக்கு அதே ஒரு பெரும் ஏக்கமாயிருக்கிறதே.

பத்:-நாதா! கவலை அடையவேண்டாம். கூடிய சீக்கிரம் வந்துவிடுவான் என்று நினைக்கிறேன்.

[சத்தியவானும் மாடவ்யனும் தாய் தந்தையரைச் சந்தித்து மனது திடுக்கிட்டு.]

விருத்தம்.

தந்தையே போற்றிநீங்கள் தாயுட னிந்தக் காட்டில்
சிந்தையே கலங்கிவாடித் திரியவும்நேர்ந்த தென்னே
எந்தமா பாவிஇவ்வா றிடாது செய்தான் சொல்வீர்
இந்திர னெனினுங் கொல்வேன் எமபுரத் தனுப்புவேனே.

கல்யாணம் பண்ணி வையுமே என்ற மெட்டு

இராகம்-தேசிகபியாக்-தாளம்-ஆதி.

பல்லவி.

என்னகுறை வந்தது உமக்கு-எந்தையேசொல்வீர்
என்னகுறை வந்தது உமக்கு (என்)

அநுபல்லவி.

நன்னகரம் நாடிழந்து நாதியற்றுடல் மெலிந்து
அன்னையும் தாங்களுமாக ஆரணியந்தன்னில்நோக (எ)

சரணங்கள்.

மன்னுலகி லெந்தப்பாவி வந்திடர் புரிந்தான்மேவி
கண்ணிழந்த தேனோதொல்லை காரணந் தெரியவில்லை (எ)

பாரவனத் தேவிரட்டிப் பார்வையைக் கெடுத்தமட்டி
யாரவன் புகல்வீரின்றுயானவனைக்கொல்வேன்சென்று (எ)

[துயுமத்சேனன் மைந்தனைத்
தடவிப்பார்த்துஉச்சிமோந்து]

குழந்தாய்! நீ கோபம் கொள்ளாதே "பொறுத்தார் பூமியாண்டார் பொங்கினார் காடாண்டார்" என்ற சாதாரணவாக்கியம் நீ நன்குணர்ந்ததுதானே? இது விஷயத்தில் நின் கோபம் என்னை மீறாதிருக்கவேண்டும். முதலில் இந்த வரம் கொடு.

சத்:-தந்தையே! தங்கள் வாக்குக் கெதிர்வாக்கில்லை; அப்படியே வரமளித்தேன், விஷயத்தைச் சொல்லுங்கள்.

ஆயமுதே தரதேசி என்ற மெட்டு.

இராகம்-தேசிகதோடி தாளம்-ஆதி.

துயு:- பாவிகளுகேதுசெய்த பாதகமிதுதானே
பாலாயானே னொந்தேன் காலந்தானே - தாங்கள்
யிங்கேனே - ஆழ்ந்து

சத்:- பார்வையிழந்தது

செய்தானே

துயு:- பாராதவனிது
பாலாயானே னொந்தேன் காலந்தானே (பா)

சத்:- தொஹறா.

பாரரசு பாக்கியமிவை பதிபறித் தாலுமவை
பற்றியொரு கவலை யில்லை

பண்ணாத கோலமிது பண்ணிவைத் தான்மனது
பதறுகிற தென்னுமெல்லை

பாட்டுத் தொடர்.

சத்:-பாதாளம் போகுகின்றேன் பகர்வீர் விடையெனக்கு
துயு:-பதறுதுள்ளம் பொறுப்பாய் பதட்டமேனுடனக்கு
சத்:-பாவமொன்று செய்தறியோம் பரதேசி யாகலாமோ
துயு:-பங்கயனெழுதிவைத்த படியன்றி வேறதாமோ

பல்லவி யெடுப்பு.

சத்:-பஞ்சையவன் நெஞ்சினூக்கப் பாங்கறிவேன் சென்று
துயு:- பாலா செல்ல இது காலமல்ல-மகனே (பா)

பாலா! இதற்குமுன் நீனெனக்குத் தந்துள்ள வார்த்தைக் கேவலம் கோபத்தைப்பொருட்படுத்தி மறந்துவிடமாட்டாய் "செல்லாவிடத்தில் சினந்தீது செல்லுமிடத் தில்லையதில் தீயபிற" என்ற வாக்கியத்தின் அர்த்தமும் அதனனுபவமும் நீ அறிந்தவன் தானே?

சத்:-எந்தையே! அவன் செய்திருக்கிற காரியங்கள் முற்றுங்கடவுளுக்கே பொருத்தமற்ற காரியம். ஆயினும் 'தந்தைசொல் மிக்க மந்திரமில்லை' என்ற நீதிப்படி நான் தங்களுக்கு முன் தந்துள்ள வாக்கை யநுசரித்துப் புற்றினுள் சர்ப்பம் ஒடுங்கியதுபோல் ஒடுங்கினேன் [தாயாரை நோக்கி]

அம்மா! புத்திரன் நமஸ்கரிக்கின்றேன்.

பத்:-மகனே! நீ தீர்க்காயுளாய் வாழக்கடவாய்!

மாட:-மகாராஜா அவர்களுக்கும், ராணிஅம்மாள் அவர்களுக்கும் என் நமஸ்காரம். (இருவரும்) அப்பா! நீ சகலசம்பத்துடனும் வாழ்வாயாக! நீ என் புத்திரனுடன் தேசசஞ்சாரஞ்செய்து, அவனுக்கு யாதொருசங்கடமும்நேராவண்ணம்உதவிபுரிந்து, நீங்களிருவரும் வந்து சேர்ந்ததற்காக நாங்கள் மிகவும் நன்றி பாராட்டுகிறோம். இனிநீவீடுசேர்ந்துசுற்றஞ்சூழவாழ்வாயாக.

மாட:-அரசே நான் தங்களையும் நமது இளவரசன்சத்தியவானையும் விட்டு, அரைக்கணம் தனித்திருக்கமாட்டேன். ஏனென்றால்,

"அற்றகுளத்தில் அறுநீர்ப்பறவைபோல்
உற்றழித் தீர்வார் உறவல்லர் - அக்குளத்தில்
கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் போலவே
ஒட்டியுலர்வார் உறவு" என்றபடி நீங்கள் ராஜ்யபரிபாலனம் புரிந்துகொண்டிருந்த தருணம் தங்களோடு நான் ராஜபோக மநுபவித்துவிட்டு, நீங்கள்வறுமையடைந்தசமயம்நான்மாத்திரம் இன்பம் அநுபவித்துக்கொண் டிருக்க முடியாது. ஆகவே என்னையும் தங்கள் புத்திரனைப்போல் ஏற்றுக்கொள்ளல் வேண்டுமெனக்கேட்டுக்கொள்கிறேன். (வணங்குகிறான்)

த்யு:-அப்படியானால் நிரம்ப சந்தோஷம்! நீதான் சற்புத்திரன். (சத்தியவானை நோக்கி) கண்மணி! நீங்கள் இருவரும் நாட்டிலிருந்து இன்பமாய்க் காலங்கழித்து வந்தது போலவே இக்காட்டிலும் துன்பத்தை ஒரு இன்பமாய் எண்ணிக்கொண்டு காலங்கழித்து வருதல் வேண்டும். அதுதான் ஞானம்.

இருவரும்:-உத்திரவின் படியே!

[இங்கு ரிஷிக்கூட்டங்கள் வந்து சேருகின்றனர். எல்லோரும் சந்தோஷமாய்ப் பேசிக்கொண்டிருந்து ஆச்சிரமஞ் செல்லுகின்றனர்]

காட்சி முடிகிறது.

இரண்டாம் அங்கம், காட்சி ஒன்று.

இடம்:-மத்ராபுரம். கன்னிகாமடத்துள்ள பூந்தோட்டம்.
நடர்:-சாவித்திரி, தோழிகள், அஸ்வபதி, மாலவி, நாரதர்.

[சாவித்திரி தோழிமார்களை விட்டுப்பிரிந்து தனித்துவந்து விரகதாபத்துடன்.]

ஆஹா! என் நாயகர் என்னைவிட்டுப் பிரிந்ததும் என் மனது அவர் பின் சென்றுவிட்டது. இன்றோடு நாள் இரண்டாகிறது. அதற்குள் இரண்டு யுகங்கழிந்ததுபோல் தோற்றுகிறதே!

தும்பினமோரி என்ற வர்ணமெட்டு.

இராகம்-தேசிகதோடி-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

மயக்கமேலாடுது மதிமுகம்வாடுது
மனமிகத்தளருதென் செய்குவேன்
மன்னவர்வாராரோ வந்தெனைப்பாராரோ
வனிதையிக்கினியெவ்வா றுய்குவேன் (மய)

கைவளைசோருது காந்தலும் மீறுது
கருகுதென் தலையுடல் பாரமே
கண்ணென்றுதேடுது கருந்தொன்று நாடுது
கணவர்வருவதொரு வாரமே (மய)

தென்றலும்வீசுது தேகமும் கூசுது
தினகரனைப்போல்மதி காயுதே
சிற்றிடைநோகுது சிந்தைவேறுகுது
திருமகன்கணையுரம் பாயுதே (மய)

ஆஹா! இந்த விதமான துன்பத்தை யெல்லாம்விட்டு, நான் எப்போது நிவர்த்தியடையப் போகிறேன்! என் மனதிலுள்ள துயரத்தை என் தோழிமார்களுடன் கூறுவதற்கும் முடியவில்லை. அவர்களும் என்னை அடிக்கடி "நீயேன் ஒரு விதமான வாட்டத்துடன் இருக்கிறாய்?" என்று கேட்டுக்கொண்டே வருகின்றனர். ஆசை சொல்லுவோமென்று தூண்டுகிறது; வெட்கம் அதைத் தடுக்கிறது.

முறையல்ல நீ பேசுதல் என்ற வர்ணமெட்டு.

இராகம்-தேசிகசுருட்டி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

வனத்தில்கண்டு காதல்கொண்டேன் மாது தோது மிகவே (வன)
வாரமொன்றுக்குள்ளே வாரேனென்றுசொன்ன
மன்னன்வருவாரோ வாராது போவாரோ (வன)

அநுபல்லவி.

எனக்குச்சந்தேகமிதே எண்ணியதுபோல் தப்பாதே
ஈடேறுமோ அல்லா நீசன் செயலெதோ
என்னை மணப்பாரோ ஏதேதுநேருமோ (வன)

தோகைரு.

என்றுநா னன்னவரை என்னிருகண் குளிரவே
　　எழிலறுகண் டுறவாடுவேன்
என்றவரும் நானுமா யிருந்தேக போகமாய்
　　இன்பமுற னிகூடுவேன்

பல்லவி யெடுப்பு.

தென்றல் வரும்மாலையிலே　　செண்பகப்பூஞ்சோலையிலே
　　இத்திக்கப் பாஸ்கர　　வித்துவ கிருஷ்ண
　　உத்தமர் சொல்லிய　　சித்தசமாரனை　　(வண)

ஆஹா! எனக்கு நல்லகாலம் என்று பிறக்கப்போகிறது? எத்தனையோ விரோதிகளுக்குமுன் ஆதாவற்ற பேதைப்பெண்ணு கிய என்னைத்தனியேவிட்டுவிட்டு, என் நாதர் பிரிந்துவிட்டனரே! அவர்மனது என்ன கல்லா? அல்லது இரும்பா? அதெல்லாம் இருக் கட்டும். இந்தச்சந்திரனும், அன்னப்பறவைகளும், குயிலினமும் எனக்கு நேரில் நின்று துன்பமுறுத்துகின்றன. எனக்குத் தெரி யாமல் மறைவில் நின்று என்னை வருத்துகின்ற மன்மதனுடைய ஆண்மையும் ஒருஆண்மையோ! அவன் கையிலிருப்பதும்வில்லோ!

[இவை முற்றிலும் மறைவில் நின்று கேட்டறிந்த
தாதிகள் அரசிக்குச் சொல்லுமாறு ஒருத்தியை
அனுப்பிவிட்டுச் சாவித்திரியிடம் வந்து]

சாவித்திரி! இது என்ன இது? எப்பொழுதும் நீ தனித்து நின்றே வருந்துகின்றாய்! இரண்டொரு தினத்திலுன் உன்மேனி வாடி விட்டதே! எங்களுக்குத் தெரிவிக்கக் கூடாதா என்ன?

[சாவித்திரி திகைத்து ஒன்று மறி
யாதவள் போல் அபிநயித்து]

சேடிகாள்! அப்படிக்கொன்று மில்லையே!

ஐயோயிது ஞாயமா என்ற மெட்டு.

இராகம்-தேசிகபியாக்-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

சேடி:- தேவியேனோ வாடுராய் சென்றதையோதேடுராய்
　　சித்தவெறி கொண்டனை சின்னமேது கண்டனை　(தே)

சாவி:- ஆவிநிகர் தோழிகாள்　யாரங்கவர் பார்மின்காள்
　　ஆச்சரியங் காணுது　ஆடவர்போல் தோணுது (ஆ)

சேடி:-தேகமும் வியர்த்தது செவ்விதழ் வெளுத்தது
செப்புவா யுகந்தது செய்குவோம் தகுந்தது (தே)

சாவி:-வாகுள மனோகரர் வந்தகரு ணாகரர்
வஞ்சிஎன்னை ஒப்பினார் வார்த்தை ஒன்று செப்பினார் (வா)

சகிகாள்! நீங்கள் அறியாதது என்ன இருக்கிறது? அன்று நந்தவனத்தில் நடந்த நிகழ்ச்சி நீங்கள் அறிந்ததுதானே? அந்தப் பூமானைக் கண்டதுமுதல் இரவும் பகலும் எங்கு நோக்கினாலும் அவரது உருவெளித்தோற்றமே எனக்குத் தோன்றுகிறது. என் சஞ்சலத்தை நீக்க உங்களால் முடியவில்லையே!

[அங்கோரிடத்து அமருகின்றாள். தோழிகள் அருகிற்சென்று சூழவிருந்து உபசரிக்கின்றனர். அவர்களருகு படுத்துப்புரண்டு]

சாவித்திரி:- விருத்தம்.

வெண்ணிலவு காய்வதனால் வெந்ததுடல் வேகுதுள்ளம்
விம்புக் கென்மேல்
புண்ணிலொரு பொன்னூசி புகுந்ததென மதன்வாளி
பொருதுகின்றான்
பெண்ணணங்கீர் நீர்புரியும் பிரியவுப சாரணையெல்லாம்
பேத மாகும்
கண்ணுறவென் கணவனையான் காணுதற்கே மனமுருகும்
கவலை யிதே.

தோழிகாள்! நான் எவ்வாறுதேறுவேன்? 'ஒருவாரத்துள் வருகிறேன்' என்று சொல்லிச்சென்ற என் காதன் வாக்குறுதிப் படி வருவாரோ, வரமாட்டாரோ தெரியவில்லையே!'

தோழி:-தேவி! நாம் மாடம் செல்லுவோம். அங்குசென்று நின் நாயகன் சத்தியவான் வருவதற்கேற்ற பிரயத்தனம் செய்யலாம்வா! எழுந்திரு இனி இங்கு நாம் இருக்கப்படாது.

[எழுந்து கன்னிகா மாடம் செல்லுகிறாள். மாலினி முன்னும் சென்றதோழி பின்னும் வருகின்றனர்.]

மால:-குழந்தாய் சாவித்திரி! என்ன உன் உடம்புக்கு? ஏன் வாடி இருக்கிறாய்? உனக்கு என்ன நேர்ந்தது?

தேக்கேமேரியாலா என்ற வர்ணமெட்டு.

இராகம்-இந்துஸ்தான்பியாக்-தாளம்-ஆதி.

பல்லவி.

அருந்தவச்செல்வி அன்னமேசாவித்ரீ-மனதுவாடி
அயர்ந்ததே னோவென்புத்திரி (அரு)

அநுபல்லவி.

இருந்துவிசாரமே ஏற்றாயிந்நேரமே
ஏக்கங்கொண் டாயபாரமே (அரு)

சரணம்.

அன்னபானாதிய ருந்து தலைமறந்தனை
அணிவகை துறந்தனை
அங்கமும் மங்கிய கமும் நொந்தனை
ஆவியே தேவியே மேவியே
யாதுமீது சிந்தனை (அரு)

தையலே கையில்த ரிவளையல் தளர்ந்தது
தலைமுடிய விழ்ந்தது
தாமரை மாமுக மேன்வெளிர்ந்தது
சங்கையே னிங்கையே நங்கையே
சாற்றுவாய் நிகழ்ந்தது (அரு)

இங்கித சங்கீத பியாசை யுமேவெ றுத்தனை
ஏதுடல்க றுத்தனை
என்றுது மெண்ணி பெலாம றுத்தனை
என்னிடம் கன்னிநீ இன்னதென்
றியம்பிடா தொளித்தனை (அரு)

கண்மணி! என்ன நிகழ்ந்தது? என்னிடம் நீ ஒளியாமல் சொல், நான் முன்னமே தோழிமார்கள் மூலம் விசாரித்தறிந்தேன்.

சாவி:-(அவளை வணங்கி நாணமுடையவளாய்) அம்மா! தாங்கள் தான் முன்னமே தெரிந்துகொண்டீர்களே! பிறகு ஏன் என் னைக் கேட்கவேண்டும்? [பூமியை நோக்குகிறாள்.]

மால:-மகளே! என்னிடத்திற்சொல்லநீஏன் வெட்கமடைகின்றாய்? நடந்தவற்றை நீயே சொன்னால் அதில் எனக்குத்திருப்தி யுண்டாகும். நின் இஷ்டம்போல் ஒரு கணவனை வரித்துக் கொள்ளத் தந்தையே நினக்குக்கட்டளை யிட்டிருக்கின்றாரே?

சாவி:- ஆம்! அதுசரிதான்; அதில் ஒன்றும் ஐயப்பாடில்லை. ஆனால்

எதுக்கிங்கிவள்வாரான் என்ற மெட்டில் பின்முடுகு.

இராகம்-சஹானா-தாளம்-ரூபகம்.

பல்லவி.

அம்மாஎனக்கோரெண்ணம் அடியாள்கருதும்வண்ணம்
ஆகுமென்றேயுறுதி அளிப்பீர்மனங்கருதி (அ)

அனுபல்லவி.

பெம்மான்கிருபையாலே பெற்றீரெனைமண்மேலே
பிரியமுடனெனைக் குரியதிருமணம்
அரிவைநலமுறப் புரிவதுவேகுணம்

அத்தனருள் சத்யவானைம
னத்திலேயான்வ ரித்துவாடுறேன் (அம்)

தாயே! அன்று பூங்காவனத்தில் ஜலக்கிரீடை செய்துவரச் சென்றிருந்தோம். அங்கு அப்பா வேட்டையாடுகையில் தப்பிவந்திருந்த ஒருசிங்கம் என்னைப்பாய்ந்தது. அதுசமயம் சால்வபுரத்து இளவரசாகிய அந்தப்பூமான் தெய்வம்போல் முன்வந்து அச்சிங்கத்தை வதைத்து, என் உயிரைக்காத்தனர். அதுபற்றி ஒருவரோடொருவர் சந்திக்க நேர்ந்து அவரையே நானும், என்னையே அவரும் மணந்துகொள்வதாய் வாக்குறுதி செய்துகொண்டோம்.

[அஸ்வபதி வருகிறார். எல்லோரும் எழுந்து நமஸ்காரம் செய்கின்றனர். அவரோர் ஆசனத்து அமர்ந்து எல்லோரையும் அமரும்படி செய்வித்துத் தன் நாயகியை நோக்கி,]

காதலி! குழந்தை சாவித்திரியிடம் விபரமனைத்தும் கேட்டுத் தெரிந்து கொண்டனையா? விவாகத்திற்கு ஏற்பாடு செய்துவிட வேண்டியதுதானே? [சாவித்திரி நாணத்தோடு ஒதுங்கிநிற்கிறாள்.]

மால:-ஆம்! நமது புத்திரியின் தோழிமார்கள் முன்னர் நம்மிடம் சொன்னவை முற்றும் உண்மையே.

[பின்பேச நா வெடுப்பதற்கு முன் அங்கு நாரதர் வருகின்றார்.]

0-,ർ92.MK44,5
N33

காந்திமஹான் என்ற வர்ணமெட்டு.
இராகம்-தேசிகசுருட்டி-தாளம்-ஆதி.

பல்லவி.

அரிகேசவா-ஓம்
ஆதிநாராயணஸ்ரீ அரிகேசவா ஓம் (ஆ)
அரிகேசவா-கிருபை-அருள் கேசவா ஓம் (ஆ)

அநுபல்லவி.

சோதிசுயம்ப்ரகாசா சுகிர்தப்ரதாபநேசா
தொந்தா அடிமையென் சிந்தாகுலமற
வந்தாளரியப தந்தாமறைநுதி (ஆ)

சரணம்.

தாமோதராமுகுந்தா சகலமதசம்பந்தா
சங்கராஹராஹர எங்கினும்நிறைபர
தங்குமென்வினையற இங்கிதமதந்த (ஆ)
அன்பர்தமக்குரியாய் ஆனைநுக்கரியாய்
அத்திக்கொருமுறை பக்திக்கருளிய
முத்திப்பிரணவ நித்யப்பிரமமே (ஆ)
சந்தச்சரபவித்வ தமிழ்க்கிருஷ்ணசாமிதத்வ
தர்மபுரந்தர மர்மநிரந்தர
பிர்மசுதந்தர கர்மதரந்தர
சதுர்மறைபுகழ்பெறு [illegible]னுமொரு
விதரணமலர்மகள் மருவியபுயதிரு (ஆ)

[எல்லோரும் எழுந்து சாஷ்டாங்கமாய் நமஸ்கரிக்கின்றனர். ஆசிகூறி அமருகின்றார். நாணத்தோடு விளங்கிய சாவித்திரி அவரைக்கண்டு ஒருபக்கம் மறைந்து நிற்க]

நார:-அரச! ஏன் நிற்கின்றீர்கள்? எல்லோரும் அமருங்கள். என் சௌக்யந்தானே? எதைப்பற்றியோ பேசுகிறீர்போலும்?

அரச:-ஆம் சுவாமி! தங்களுடைய கடாட்சத்தால் யாவரும் சுபம், சுபகாரிய சம்பந்தமாகவே நாங்கள் பேசும் தருணம் தங்கள் வரவு எங்களுக்கோர் மஹா பாக்கியம்!

காட்சி முடிகிறது.

சாவித்திரி-சத்தியவான்

முதல் பாகம் முற்றிற்று.

11907

படிக்கவும் கேட்கவும் இன்பம் தரும் பாடல்கள்.

முத்தமிழ் க்ஷேத்திர மதுர

பாஸ்கரதாஸ் அவர்களியற்றிய

இந்து தேசாபிமானிகள் செந்தமிழ்த் திலகம்
1, 2 பாகங்கள் விலை அணா 0—6—0
புதிய பெரிய பக்திரஸ கீர்த்தனங்கள் ,, 0—5—0
ஷை இரண்டாம் பாகம் ,, 0—5—0
வீரசக்தி சரித்திரம் ஷை பாரியற்றியது ,, 0—5—0
வள்ளியம்மை சரித்திரம் ஷை ,, 0—6—0
அதிரூப அமராவதி ஷை ,, 0—6—0
சகுந்தலை 1, 2 பாகங்கள் ஷை ,, 0—6—0

செந்தமிழ்ச் சரபம் விரகாலூர்

மகா-ள-ள-ஸ்ரீ சுப்பையாபிள்ளை அவர்களியற்றிய,

கோவலன் சரித்திரத் திருப்புகழ் காவடிச்சிந்து 0 2 0
நல்லதங்காள் சரித்திரத் திருப்புகழ் காவடிச்சிந்து 0 2 0
அரிச்சந்திரன் திருப்புகழ் காவடிச்சிந்து 0 2 0
பதிவிரதா சத்தியவான் சாவித்திரித் திருப்புகழ் 0 2 0
இராமாயணத் திருப்புகழ் காவடிச்சிந்து 0 2 0
இலங்கா தகனத் திருப்புகழ் காவடிச்சிந்து 0 2 0
ஞானசௌந்தரி சரித்திரம் 1, 2 பாகம் 0 4 0
அல்லியரசாணி சரித்திரத் திருப்புகழ் காவடிச்சிந்து 0 2 0
பாண்டவர் சரித்திரப் பாரதக்காவடிச்சிந்து திருப்புகழ் 0 2 0
பரமன் திருமால்மருகன் பக்திரஸக் கீர்த்தனை 0 2 0

மதுரைத் தமிழ் வித்வான் மகா-ள-ள-ஸ்ரீ

நா. கிருஷ்ணசாமி நாயுடு அவர்களியற்றிய

நல்லதங்காள் சரித்திரம் 1-2 பாகங்கள் 0—4—0
ஞானசவுந்தரி சரித்திரம் 1-2 பாகங்கள் 0—4—0
சகுந்தலா சரித்திரம் 1-2 பாகங்கள் 0—4—0
சாவித்திரி சரித்திரம் 1-2 பாகங்கள் 0—4—0
பாரிஜாத புஷ்பாபகரணம் புதிய வர்ண மெட்டுக்கள் 0—2—0
நந்தன் சரித்திரம் புதிய வர்ண மெட்டுக்கள் 0—2—0
கோவலன் சரித்திரம் புதிய வர்ண மெட்டுக்கள் 0—4—0

இவை நாகரிக வர்ணமெட்டுகளும் நாவல் நடையும் அமைந்தன.

இ. மா. கோபாலகிருஷ்ணக்கோன்,
புக்ஷாப், ஸ்ரீ கோபால் மஹால், வடக்குச்சித்திரை வீதி,
மதுரை.